தென்மொழி

கொடும் வறட்சி
உற்றதுவோ
நல்லறிவு செயற்கே!



உளந்திரிந்து சொல்திரிந்து
செயல்திரிந்து போன
உலுத்தரிடை மொழிநலமும்
இன நலமும் கூறி
வளந்தெரிந்து பொதுநலத்தைப்
புதுக்கிடுவீர் என்றால்
வருகின்ற அன்பரெலாம்
முகந்திரிந்து செல்வார்!
களந்தெரிந்து முனைந்தாலும்
கடுகுவிளை வில்லை!
காதுபட உரைத்தாலும்
செவிதருவார் இல்லை!
குளந்திரிந்து நீர்வற்றிப்
போனதுபோல் நாட்டில்
கொடும்வறட்சி யுற்றதுவோ
நல்லறிவு செயற்கே!

சுவடி : 19 விலை
ஓலை : 8-9 உருபா 1-25

நமக்கு வந்த மடல்கள்.

0 : 971: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கங்கள் பல. பெருந்தகை ஐயா! தென்மொழி, தமிழ்ச்சிட்டு இரு இதழ்களையும் இனி நிறுத்திவிடுவதாகத் தாங்கள் எழுதியதையும் அதைத் தொடர்ந்து அன்பர்கள் பல்லோர் எழுதிய அஞ்சல்களையும் கண்ணுற்றேன். அவற்றில் பெரும்பாலானவை. அவை தொடர வேண்டும் என்ற எண்ணங்களையே வெளிப்படுத்தியுள்ளன. யானும் அவ்வாறே வேண்டுகிறேன். காரணியம், யான் கடந்த ஆறு ஆண்டுகளாகத்தான் தென்மொழி படித்துவருகிறேன். முன்னரே தமிழ்ப்பற்றும், இனப்பற்றும் மிக்கவனாக இருந்தாலும், தென்மொழி படித்த பின்னர்தான் அது முழுமைபெற்ற உணர்வாக, வாழ்வின் குறிக்கோளாக, உயர்ந்த குறிக்கோளாக வலுவடைந்துள்ளது. அதன்பயனாக எமது பள்ளியின் தலைமையாசிரியர் அனுமதியுடன் மூன்று தென்மொழிகள், மூன்று தமிழ்ச்சிட்டுகள் ஆக ஆறு இதழ்கள் மாணாக்க மாணாக்கியர்கள் கைகளில் தவழ்கின்றன. இவர்களில் ஒவ்வோர் ஆண்டும் ஒருசிலர் தென்மொழிப்பற்றாளர்களாக மாறினாலும், அதன்பயன் எத்தகையதாக இருக்கும்? இதேபோல இன்றும் பல இடங்களில் பலரால் செய்யப்பெறலாம்; இனிமேலும் பலர் அவ்வாறு செய்ய முன்வரலாம். இதைவிடப் பெரிய வெற்றி எதன்மூலம் விளையப்போகிறது?

பொருளியல் சிக்கல்பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அது கவனிக்கக் கூடிய சிக்கல்தான். இத் தமிழகத்தில் ஈராயிரத்தைநூறுக்கும் மேற்பட்ட உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிக இருக்கின்றன. இதில் பல ஆயிரம் தமிழாசிரியர்கள் பணியாற்றலாம். சராசரியாக ஒரு பள்ளிக்கு நான்கு இதழ்கள் மேனி வாங்கினாலும், பத்தாயிரம் இதழ்கள் திங்கள் ஒன்றுக்கு விற்பனையாகலாம். இது உதவியாக இருக்கும். தமிழால் வாழ்பவர்கள், தமிழுக்காகத் தொண்டாற்றும் ஓர் இதழுக்குச் செய்த பேருதவியாகும். ஆனால் நடைமுறையில் நடைபெறக்கூடியதா என்பது ஐயப்பாடுதான். காரணியம், மொழியைக் கற்பிப்பதே தொழிலாகக் கொண்டவர்களில் எவ்வளவுபேர் அம்மொழிமீது பற்றுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதும், அம்மொழியின் ஆக்கமும், ஊக்கமுமே இனத்தின் வலிமை என்பதும், எவ்வளவுபேர் அறிந்து செயல்படுகிறார்கள் என்பதும் சிந்தித்தற்குரியன. மற்ற ஆசிரியர்களும், துறையினரும் பெரும்பாலோர் மொழிவளர்ச்சி பற்றியோ, இன உணர்வு பற்றியோ எதுவுமே எண்ணாத நீரோட்டங்களாக இருப்பதும், தென்மொழி போன்ற இதழ்களுக்குத் துணைகுறைவது இயல்பே! இதுதான் நமது இயற்கைச் சொத்தாயிற்றே! உலகில் நடந்துள்ள இயக்கங்களும், போராட்டங்களும், கொள்கை முழக்கங்களும், இழப்புகளும், துன்பங்களும், இடையூறுகளும், ஊடறுப்புகளும் இல்லாமல் வெற்றிபெற்றதாக வரலாறு கிடையாது என்ற உண்மை தாங்கள் அறியாத ஒன்றன்று.

'முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் என்பது ஒரு பழமொழி. அதுபோல இன்றைய நிலையில் பலர் மொழி, இன, மானமற்ற மந்தைகளாக, குறிக்கோளற்ற, வெட்டிக் கதைகள்

பெரியாரையும் பாவேந்தரையும்
பட்டிமன்றத்திற்கும் - பாட்டரங்கத்திற்கும் மட்டுந்தான்
பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா?

உரிமைக் கிளர்ச்சியால் ஒன்றுபட் டார்ந்தே
அரிமா முழக்கோடு **'அசாமியர்'** எழுந்தனர்!
குருதி யாறு கொப்பளித் தோடினும்
இறுதி உரிமைக்கு இராப்பகல் போராடி
விடுதலை மூச்சுக்கு விடிவு தேடினர்!

அடுதலைப் போருக்கு அங்கொரு 'பெரியார்'
பிறந்திட வில்லை; பேசிட வில்லை!
இருந்தும் ஆங்கோர் இனப்போர் எழுந்தது!

பாவேந்தர் போலொரு புரட்சிப் பாவலன்
நாவேந்து பாக்களால் நாட்டாமற் போயினும்
'பஞ்சா பியர்'கள் பச்சைக் குருதியால்
எஞ்சா மறத்தோடு இன நலம் முழக்கினர்!
உணர்வால் பாவேந்தர் பஞ்சாபியர் உளத்தில்
புணர்ந்து செயல்படும் புரட்சியைக் கண்டோம்!

பெரியார் என்னும் பெற்றிடாப் பேற்றை
உரிய காலத்தில் உவந்துபெற் றிடினும்,
அவரின் உழைப்பை அலித்தமி ழினமோ
கவன மின்மையால் கைநெகிழ்த்து விட்டது!

அதுபோல்,
பாவேந்தர் தமிழர்க்குப் பயன்படும் வகையையும்
ஈவால் அவர்தந்த இன நல உணர்வையும்
எண்ணிப் பார்க்கிறோம்! இழிவுமிக இழிவு!
பண்ணிப் பண்ணிப் பாவேந்தர் பாடலை
மேடை தோறும் மிடுக்குடன் முழக்கிக்
கூடை கூடையாய்க் கொட்டி அளக்கிறோம்!

பட்டி மன்றமாய்ப் பாட்டரங் குகளாய்
வெட்டிப் பேச்சொடு விலாவலி யெடுக்க
ஆர வாரம் செய்கிறோம்! அவருடை
வீர உளத்தினை விளையாட் டரங்கமாய்
மாற்றி நம்மையும் மாய்த்துக் கொள்கிறோம்!
ஏற்றிப் போற்றியே அறிவை இகழ்கிறோம்!

பெரியார் உணர்வினைப் — பாவேந்தர் பீடினை —
அறியாத் தமிழராய், ஐயகோ; அழிகிறோம்!
தமிழர் இனமே! தாழ்ந்துபோம் இனமே!
இமியும் பொறுத்திடற் கில்லை! இனியேனும்
அமிழா உணர்வினால் ஆர்ந்துடன் எழுகவே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி — இனம் — நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை),
தென்மொழி ந.முத்துக்குமரனார், தென்மொழி. ப. துரையரசன்.
தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] உ௦கச மேழம் - விடை (ஏப்ரல்-மே'83') **[ஓலை: 8-9**

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்-3

மொத்தத்தில், பாவாணரின் சொல்லியல் ஆராய்ச்சி வாழ்க்கை தென்மொழியாலேயே மலர்ந்தது; வளர்ச்சி பெற்றது; காய்த்தது, கனிந்தது. அந்த அளவில் **தென்மொழி** அவருடைய வாழ்க்கைக்கும், ஆராய்ச்சி வெளிப்பாட்டிற்கும் பெருத்த துணை நின்றது. இதை அவரின்

'தமிழர் வரலாறு' என்னும் நூலின் 346, 347-ஆம் பக்கங்களில் இவ்வாறு குறித்துள்ளதை அறிஞர்கள் பார்க்கலாம். அதில்,

'தமிழ்ப் புலவர் தமிழைப் பழம் பெருமைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆசிரியர் அறிவியல் மனப்பான்மை கொள்ள வேண்டுமென்றும், அடிக்கடி அமைச்சரால் சொல்லப்படுகின்றது. ஆயின், அறிவியல் முறைப்படி தமிழை ஆய்ந்து வளர்ப்பவர் பிழைப்பின்றிச் சாகவும், தமிழைக் காட்டிக்கொடுப்பவர் மேன் மேலுயர்ந்து வாழவுமே, இற்றைத் தமிழ்நாட்டு நிலைமையுள்ளது.... இந்நிலைமையே நீடின், இனித் தமிழுமில்லை; தமிழாராய்ச்சியுமில்லை'-என்று எழுதிவிட்டு,

'இன்று நான் உடம்போடிருந்து இந்நூலெழுதுவதற்கு ஏது வாயிருந்தவர், **பாவலர் பெருஞ்சித்திரனார்**, செட்டிக்குளத்து நெச வாசிரியர் திரு. நாகமுத்தனார், செங்காட்டுப்பட்டித் திரு. செந்தமிழ்க் கிழார், அன்னத்தாளக ஆசிரியர் திரு. முருகனார், என் மதுரை மணிவிழாக் குழுவார், புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தார், தவத்திருக் குன்றக்குடியடிகள் ஆகியோரே.' என்று குறிப்பிடுகிறார்.

இப்பெயர்ப் பட்டியலுள் குறிக்கப்பெற்ற திரு. அர. நாகமுத்த னார் அவர்களும், செங்காட்டுப்பட்டித் திரு. செந்தமிழ்க் கிழார் (நா. செல்வராசன்) அவர்களும், பாவாணரின் **'தமிழ் வரலாறு'** (1967) வருவதற்குதவியாகப் பெரிதும் நன்கொடை திரட்டிக் கொடுத்தவராவார்கள். திரு. முருகனார் பாவாணர்க்கு அவ்வப் பொழுது தம் பொறுப்பில் நன்கொடையனுப்பி வந்தவராவார். மதுரை மணிவிழாக்குழுவினரும், புன்செய்ப் புளியம்பட்டி மறை மலையடிகள் மன்றத்தாரும், அவரின் **தமிழர் வரலாறு** (1972) வெளிவரப் பெரிதும் துணை நின்றவர்கள். தவத்திரு. குன்றக்குடி யடிகள் பாவாணர்மேல் தனியன்பு காட்டி அவர் நேர்ப்படுங்காலெல் லாம், சிறு சிறு தொகையை அன்பளிப்பாகத் தந்தவர். அவ்வப் பொழுது கிடைத்த இவர்களின் அனைத்து உதவிகளையும்விட, தென்மொழி அது தொடங்கப்பெற்ற 1959-ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு மாதமும் உரு. 30-உம் 50-உம் ஆகத் தொடர்ந்து பாவா ணர் வாழ்க்கை நலத்திற்கென உதவி வந்தது. அதன் உதவியைத்

தான் பாவாணர் 'நான் **உடம்போடிருந்து** இந்நூலெழுதுவதற்கு ஏதுவாயிருந்த' என்னும் சொற்களாலும், பெயர் வரிசையுள் நம் பெயரை முதலாவதாகக் குறித்த சால்பாலும் குறிப்பாய் விளக்கியுள்ளார். இவ்வுதவி மறைமுகமாக நடந்தமையால் வெளிப்படையாக அதைக் குறிக்கத் தேவையில்லாமற் போயிற்று.

இனி, அவர் **உடம்போடிருந்து** என்று குறிப்பிட்டதற்கு வேறு காரணியமும் உளது. பாவாணருடன் என் வாழ்க்கை நான் சேலம் உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்த 1947-இலிருந்தே தொடங்குவதாகும். அப்பொழுதிலிருந்தே பாவாணரிடம் செல்லும்பொழுதெல்லாம் அவர் விரும்பியுண்ணும் பழங்களையும் உணவுப் பொருள்களையும் கொண்டு கொடுத்து அவர் உடல் நலத்தில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டி வந்தேன் என்பதைப் பாவாணரும் இறைவனுமே முழுமையாக அறிவார்கள். என் நெருங்கிய உழுவலன்பர்கள் சிலரும் கூட இதை ஓரளவு உணர்வார்கள். இந்நிலை 1979-ஆம் ஆண்டு இறுதிவரை தொடர்ந்து இருந்து வந்தது. அவர் 23-8-79-ஆம் நாள் எனக்கெழுதிய மடலிலும் கூட, என் மகன் வழி நான் விடுத்த உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தவுணர்வை ஒரு வரியில் குறிப்பிட்டுள்ளார்.

இனி, இவ்விடத்தில் நான் இன்னொன்றையும் குறிப்பிட்டே ஆகல் வேண்டிய ஒரு நிலை இக்கால் நேர்ந்துள்ளது. பாவாணர்க்கும் எனக்கும் இவ்வளவு நெருக்கமும் ஈடுபாடும் இருந்தும் **தென்மொழி**யின் இலக்கியப் பணி குறித்தும், என் தனித்தமிழ் இலக்கிய ஆக்கங்கள் குறித்தும், பாவாணர் இறுதியாக எழுதிய **'தமிழ் இலக்கிய வரலாறு'** (1979)-என்னும் நூலில், (அந்நூலின் அச்சீட்டுக்குரிய தொகை உருபா ஐயாயிரமும் கூட, நான் சிங்கை சென்றிருந்தபொழுது, அங்குள்ள செல்வர் ஒருவரிடம் பரிந்துரைத்து வாங்கி விடுத்த தொகையாயிருந்தும்கூட) ஒரு வரிதானும் எழுதாத அவர் நன்றி மறப்பை, ஒரு மடலில் அவருக்குச் சிறிது கடுமையாகவே சுட்டி எழுத வேண்டிவந்தது. அதற்கு அவர் எழுதிய விடை மடலில் (23-8-79),

'உன்னைப் பற்றியும் 'தென்மொழி'யைப் பற்றியும் குறிப்பிடலு மின்றி விளம்பாது விட்டுவிட்டது **நன்றிக் கேடான** குற்றந்தான். இக் குற்றத்தை நீ சொல்லுமுன் நானே உணர்ந்தேன். ஆனால், இது வேண்டுமென்று செய்ததன்று. 'காம வெகுளி மயக்கம்' என்னும் முக்குற்றத்துள் ஒன்றான மயக்கம் என்னை எங்ஙனமோ இறுகப் பற்றிக் கொண்டது....ஆயினும் மறதிக்கு மருந்தில்லை. ஊழால் நேர்ந்த உணர்வின்மையே இது...இறைவனருளால், நான் செய்து முடிக்கவேண்டிய பெருந்தொண்டு நிறைவேற இன்னும் எட்டாண்டுகள் செல்லும். அதற்குள் இயன்ற விரைவில் என் நன்றிக்கடனையெல்லாம் ஒருங்கே தீர்க்கவியலும் என்று நெஞ்சம் உணர்வதால், அதுபற்றிய குற்றச்சாட்டிற்கு நான் அஞ்சவில்லை.' என்று குறித்திருக்கின்றார்.

இவைபற்றியெல்லாம் இங்குக் குறிப்பிட நேர்ந்தது, இன்று ஏதோ பாவாணர்க்குத் தாங்களே பிறங்கடைகள் போலும், அவர் தங்களாலேயே உயிர் வாழ்ந்தார் போலும், அகரமுதலிப் பணி செய்தார் போலும், தாங்களே அவர்க்கு மிக நெருக்கமுள்ள கெழுத்கையாளர் போலும், சிலர் இட்டுக்கட்டிப் பேசியும் எழுதியும் வருவதாலும், நான் இக்கட்டுரைத்தொடரின் முதல் கட்டுரையுள் (சுவடி 19, ஓலை 5-இல்) "தென்மொழியால் பயன்பெற்ற என் தலைமையாசானிடமும் அதை (நன்றியை) நான் பார்க்கவில்லை' என்றெழுதிய ஒரு வரியை வைத்துக்கொண்டு, அதனால் பாவாணர்க்கு ஏதோ வரக்கூடாத இழுக்கு வந்துவிட்டதாகக் கருதி, அதை நிரவல் செய்யக் கடமைப்பட்டவர்கள் தாங்களே போலும் எண்ணி, அதையொட்டி இல்லாததும் பொல்லாததுமாக, என் தூயதமிழ்த் தொண்டிற்கும், பாவாணர்க்கும் எனக்கும் கடந்த முப்பத்தைந்தாண்டுகளாக இருந்த தூய தொடர்பிற்கும் களங்கத்தை யுண்டாக்கும் வகையில் சிலவற்றை வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் கூறித் தென்மொழித், தொண்டில் குறைகூறிக் கறைசேர்க்க முனைவதாலுமே என்க. இனிப் பாவாணர் தம் நன்றிமறப்பைத் தாமே ஒப்பும் வகையில், அவர் எனக்கெழுதிய 23-8-79-ஆம் பக்கல் மடலில் குறித்திருப்பதே அவ்வன்பர்கள் மனக்காழ்ப்பால் என்மேல் சாட்டிய குற்றச்சாட்டை மறுத்துரைக்கப் போதிய சான்றாகும்.

இனி, பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொண்டின் தொடக்கமு ...ச்சியும் கூட **தென்மொழியின்**

தொண்டியக்கத்தின் வெளிப்பாடே என்றும் அன்பர்கள் தெளிவாக உணர்வர். பாவாணரே இது பற்றிப் பலவிடங்களில் சுட்டியுமுள்ளார்; அத்துடன், இறுதியாகவும் உறுதியாகவும், வரவிருந்த செ. சொ. பி. அகரமுதலியின் முன்னுரையில் சுட்டவுமிருந்தார். இது பற்றி, **'மலைச்சாரல்'** என்னும் இதழுக்குத் தந்த நேருரையில் (1974, சூலை, ஆகத்து இதழ்) வினு விடையில் இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

கே: **'தென்மொழி'** ஆசிரியர் பாவலர் பெருஞ்சித்திரனார் தங்கட்கு எப்படிப் பழக்கம்?

பாவாணர்: அவர் என் மாணவராயிற்றே!

கே: அப்படிங்களா; எங்கே?

பா.ர்: சேலம் கல்லூரியில்.

கே: காட்டுப்பாடியில் தங்கியிருந்த உங்கள் ஆற்றலைத் தமிழுலகிற்குப் பேரளவில் உணர்த்தியது 'தென்மொழி' என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

பா.ர்: ஆமாம்! உறுதியாக ஒப்புக்கொள்கிறேன்.

கே: தங்கள் அகரமுதலியை வெளிக்கொணர முதலில் பெருஞ்சித்திரனார் மேற்கொண்ட திட்டம் வெற்றி பெற வில்லையா?

பா.ர்: வெற்றிபெறவில்லை எனச் சொல்ல முடியாது. கொஞ்சம் தளர்ந்து விட்டது.

இனி, அவர் தம் 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் 345-ஆம் பக்கத்தில் முத்தமிழ்க் காவலர்களுள் ஒருவராக என் பெயர் சுட்டிக் குறிக்கின்ற பத்தியின் இறுதியில், "பன்னிருமடலச் சந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை உருவாக்கவும் வெளியிடவும், இதுவரை எவரும் செய்யாத வகையில் 'தென்மொழி'த் திட்டம் வகுத்து, எதிர்காலத் தமிழ் வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெழுத்திற் பொறிக்குமாறுசெய்து கொண்டவர், 'தென்மொழி' ஆசிரியர் **பாவலர் பெருஞ்சித்திரனார்** ஆவர்" என்று குறித்திருப்பதும் கவனிக்கத் தக்கது.

மெய்யான, தூய தனித்தமிழ்த் தொண்டில், தென்மொழி ஆற்றிய பங்கின் தகுதிநோக்கிப் பாவாணர் குறித்த வரலாற்றுக்

குறிப்புகளுக்கு மாறாக, இக்கால், அவர் நூற்பெயர்ச் சுட்டுகளில் ஓரிடத்தும் தம் பெயர் சுட்டிவரப் பெறாத தகுதியற்ற ஒரு சிலர், பாவாணரிடத்தும் நம்மிடத்தும் நெருங்கிய தொடர்புற்றவர்போல், அத்தொடர்பையே அடிப்படையாகக் கொண்டு, என்பாற் கேட்டதை அவர்பாலும், அவர்பாற் கேட்டதை என்பாலும் திரித்தும், முறித்தும், குறைத்தும் கூட்டியும், கொள்ளுவன தள்ளியும், தள்ளுவன கொண்டும், விதந்துகூறி, இறுதிக் காலத்துப் பூசல் விளைவித்து, எனக்கும் அவர்க்கும் இகலுண்டாக்கி, அவர் மறைந்ததற்பின் இக்கால், தாறுமாறாக, எங்கும் எவரிடத்தும் எவ்வாறும் எழுதியும் பேசியும் வருவதும், எனக்குப் பேரிடர் தருவதும், ஆகிய நிலை, எத்துணை அளியது; இரங்கத்தக்கது!

இனி, இஃது இவ்வாறுயிருக்க, தென்மொழியின் முன்னுளைய நிலை எவ்வாறுயிருந்தது என்பதுபற்றி மேலும் ஒருசில கூற வேண்டி உள்ளது.

தென்மொழியின் தொடக்கக் கால நிலையில், அதன் எழுத்தாலும் இயக்கத்தாலும் கவரப்பெற்றவர் சிலர், அதன் தொண்டுக்குத் தாமே துணைநிற்பதுபோல முன்வந்தனர். வந்தவர் அனைவரையும் முழுதும் நம்ப வேண்டியிருந்தது. தமிழ்ப்பற்றுள்ளவர்போல் வந்து, ஓரிரண்டு மணிநேரம் பேசியவர்களையெல்லாம் பேருணர்வாளர்கள் என்றும், பெருந்தொண்டர்கள் என்றும், எவ்வகை ஈகத்திற்கும் ஈடுகொடுப்பவர்கள் என்றும் எண்ணி ஏமாறிய காலம் அது. எனவே, அனைவரையுமே அடுக்களைவரை, குடும்பத்தோடு குடும்பமாகப் பழக விட்டுப் பின், பலவகையான இடர்ப்பாட்டுக்கும் துன்பத்திற்கும் குடும்பத்தையும் என்னையும் இரையாக்கிக் கொண்டேன். அவ்வாறு வந்தவர்களால் சில நன்மைகளும் விளையாமல் இல்லை.

கிழமையின் விடுமுறை நாட்களான காரி, ஞாயிறு நம் வீடு உண்டிச்சாலை போல் தூளிபடும். அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் பண்ணுவதும் படைப்பதுமே வேலைகள். இல்லெனில், தன்னந் தனியனாகத் தொடங்கிய இப் பெரும் பணிக்குச் சம்பளம் கொடுத்துப் பணியாளர்களை அமர்த்த எங்கே போவேன்? வேலை நிமிர் வாங்கும்! வந்த அன்பர்களுக்கெல்லாம் உணவளிப்பதும்

வினைபகிர்ப்பதுமாகத் தென்மொழிப் பணி ஒருவாறு எளிய முத லீட்டில் தொடர்ந்து நடந்து வந்தது. இடையிடையே மாண வர்கள் சிலர் திரட்டிய நன்கொடைகள், அன்பர்கள் சிலர் உதவிய அன்புளிப்புகள் தென்மொழி கருகி விடாதபடி உயிர்த் தண்ணீர் ஊற்றி வந்தன.

அக்கால், தென்மொழியின் ஒருபடியை வாங்கியவர்களையெல் லாம் உண்மைத் தமிழர்கள் என்று எண்ணினேன்; ஓர் ஆண்டுக் கட்டணம் கட்டியவரையெல்லாம் உண்மையான தமிழ்த்தொண்டர் என்று மயங்கினேன்; ஒரிதழை விற்றுக் கொடுத்தவரையெல்லாம் உளமுவந்து பாராட்டி வரவேற்கிறேன்; ஐந்து படிகள் விற்றுக் கொடுத்தவரைப் பற்றி அனைவரிடமும் புகழ்ந்து கூறி அறிமுகப் படுத்தினேன்; பத்துப் படிகள் விற்றுத் தந்தவர்களுக்குத் தவறாமல் பாராட்டுகள் வழங்கினேன்! இந்த வகையில் என் பணிக்கு ஒரு சிறிது துணை நின்றவர்களையெல்லாம் உறவினர்களை விட மேலாக மதித்து உறவு கொண்டு மகிழ்ந்தேன். இப்படியான உணர்வு நிலை என் உடம்பு முழுவதும் பரவியிருந்தது; உயிர்முழுதும் கவ்வியி ருந்தது. அதற்குக் காரணம் தமிழ்; தமிழ்; தமிழ்! தமிழே என் மூச்சாக, உயிராக, வாழ்க்கையாக மலர்ந்திருந்தது.

இவ்வாறாகப் பலஆண்டுகள் சென்ற பின்னர்தான் எனக்குச் சில உண்மைகள் விளங்கின; உள்ளங்கள் தெரிந்தன,

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு; அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை. (469)
எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர் (514)
அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என் றேவற்பாற் றன்று (515)

என்னும் பொய்யாமொழிகளுக்கு மெய்யுரை கிடைத்தன.

அதற்கிடையில் பல வெப்புரைகளால் விளார்ந்து போனேன்; உளமாற்றங்களால் தளர்ந்து நின்றேன்; பழியுரைகளால் நொறுங்கி னேன்; இழிவுரைகளால் நடுங்கினேன்! அன்புள்ளவர்கள் என்று நம்பியிருந்தவர்களின் அம்புரைகளும் வம்புரைகளும் என் தூயதமிழ் நெஞ்சைக் குத்திக் குடைந்து குருதி கொட்டச்செய்தன. (தொடரும்)

பெருஞ்சித்திரனார்.

செய்திகள்

1. மு. கருணாநிதி—ப. பொற்சிலம்பி வாழ்க!

கடந்த சுறவம் உச (6-2-83) ஞாயிறு காலை 10 மணியளவில் பள்ளி, தென்னூர், கோவிந்தராசு திருமணமண்டபத்தில், திருச்சி, அஞ்சலக மேல்நிலைக்கண்காணிப்பாளர் அலுவலக மேற்பார்வையாளர் திரு. க. பழனியப்பன்-செயமணி அவர்களின் மகள் செல்வி. **ப. பொற்சிலம்பி** வணி.இ.க்கும், கரூர்வட்டம், வாங்கல், நிலக்கிழார் திரு. பி. முத்துச்சாமி-மருதாயி அம்மாள் அவர்களின் மகன் செல்வன் **மு. கருணாநிதி** க.இ.,கல்.இ.க்கும், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழ்த்திருமணம் நிகழ்த்தி வைத்தார். நிகழ்ச்சிக்குத் திரு. **கரு. அன்புதாசன்** அவர்கள் தலைமை தாங்கினார். அனைவரையும் வரவேற்று மணமகள் தந்தை திரு. க. பழனியப்பன் வரவேற்புரையாற்றினார். மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள் எசு. கோதண்டராமன் (அஞ்சல் மேனிலைக் கண்காணிப்பாளர்), எம். நீலன், பி. சுந்தரராசு, வி. மூத்துச்சாமி, வி. கிருட்டிணன், தட்சிணாமூர்த்தி ஆகியோர் நல்லுரை வழங்கினர். இனிய விருந்துடன் திருமணம் இனிதே நிறைவுற்றது.

2. திருச்சி—சுழற்கழகச் சிறப்புச் சொற்பொழிவு:

கடந்த 7-2-83 மாலை 6 மணியளவில், திருச்சிராப்பள்ளி, சுழற்கழகத்தின் (Rotary Club) சார்பில், ஆனந்து விடுதியின் திறந்தவெளி அரங்கத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழ்மொழியின் சிறப்பியல்கள் குறித்துச் சிறப்புரையாற்றினார்கள். பெரும்பாலும் வேறுவகையான பொதுநலன்களிலேயே கவனம் செலுத்துகின்ற சுழற்கழக உறுப்பினர்களுக்கு இச்சொற்பொழிவு வியப்பாகவும், ஒரு புத்துணர்வை ஊட்டுவதாகவும், தமிழ்மொழி பற்றிய பெருமையை உணர்த்துவதாகவும் அமைந்ததாக அன்பர்கள் பலரும் பின்னர் கருத்துத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

3. சக்தி மகளிர் சங்கம்--தில்லை நகர்-திருச்சி.

சென்ற 8-2-83 மாலை 6 மணியளவில், திருச்சிராப்பள்ளி, தில்லை நகரில் உள்ளசக்தி மகளிர் சங்கத்தில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் பெண்டிர் சிறப்பியல்கள் குறித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். பெரும்பாலும் மேட்டுக்குடிப் பெண்டிரும், பணிசெய்யும் செல்வநிலை மகளிரும் உறுப்பினர்களாக இருக்கும்

இக் கழகத்தில், பாவலரேறு அவர்களின் சொற்பொழிவு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. சங்க உறுப்பினர்கள் பேசி மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

4. அறந்தாங்கி — பெரியார் - அண்ணா — சீவா நினைவு நாள்:

கடந்த 27-2-83 மாலை 7 மணியளவில் அறந்தாங்கி, பேருந்து நிலையம் அருகில், தந்தை பெரியார், அண்ணா, சீவா நினைவுநாள் கூட்டம், அறந்தாங்கி, பகுத்தறிவாளர் கழகச் சார்பில், நடைபெற்றது. பகுத்தறிவாளர் கழகத்தலைவர் மானமிகு ஏ.டி. மாரியப்பன் முன்னிலையில், மானமிகு சா. செல்வராசு தலைமையேற்றார். புலவர் மு. மாயிறைவன் வரவேற்புரை ஆற்றினார். திருவாளர்கள் கு. இராமகிருட்டிணன், நாத்திகராசு, சி. தங்கவேல் (இந்தியப் பொதுவுடைமைக் கட்சி), இரா. ஆறுமுகம், ந. இராசேந்திரன், அ. தாசு, எசு. சக்திவேல், ப. அரசன், **கோ. மங்கைசம்பந்தம்** ஆகியோர் உரைக்குப்பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் நீண்டதோர் உணர்வுரையாற்றினார். இரவு 1 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. பகல் உணவும் இரவுச் சிற்றுண்டியும் திரு. **கோ. மங்கைசம்பந்தம்** அவர்களால் கொடுக்கப் பெற்றது.

5. சென்னை — பாவாணர் நூலக நிகழ்ச்சி:

கடந்த 24-3-83 வியாழன் மாலை 6 மணியளவில், சென்னை, பகுத்தறிவாளர் கழகச் சார்பில், தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டடச் சொற்பொழிவு அரங்கில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் 'சங்கராச்சாரி-யார்' என்னுந் தலைப்பில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. பாவலர். கலி. பூங்குன்றன் வரவேற்புரை ஆற்றினார். சங்கராச்சாரி பற்றி, ப. கழகத் தலைவர் திரு. பகீரதன், பெரியார் பேருரையாளர் பேரா. இறையன் ஆகியோர் கருத்துரையாற்றினர்கள், தலைவர் முடிவுரைக்குமுன் செல்வி. அகங்யற் கண்ணி (அகவை 10) பாவலரேறு அவர்கள் சங்கராச்சாரி பற்றி எழுதிய **தென்மொழி** நீண்ட ஆசிரியவுரைப் பாடலை வீறு பொங்கப் பாடி உரையாற்றினார். அந்நிகழ்ச்சி அவையோரைப் பெரிதும் உணர்வுவயப்படச் செய்தது. இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் சங்கராச்சாரியின் போலித்தனமான மதநடவடிக்கைகள் பற்றி ஒரு மணிநேரம் கருத்துரையாற்றினர். துரை. நடேசன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி நிறைவுற்றது. அரங்கு நிறைந்த கூட்டமாக இது இருந்தது குறிப்பிடத்தக்கது.

6. வேடசெந்தூர் — புதுமனை புகுவிழா:

சென்ற மீனம் 20 (3-4-83)ஆம் நாள் ஞாயிறு காலை 7-30 மணியளவில், திண்டுக்கல் வட்டம் சுஞ்சப்பன் பட்டியில், திரு

நல்ல நேரத்தில் நல்லமுடிவு! மகிழ்ச்சி; செயற்படுத்துங்கள்!

7. தங்கள் தொண்டுதான் பயன்விளைக்கப் போகிறது!

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு,

வணக்கம். சுவடி 19, ஓலை 5 தென்மொழி ஆசிரியவுரையும், தமிழ்நிலம் இதழ் 10 ஆசிரியவுரையும், பொறுப்பாளர்களுக்கான அறிக்கையும் மிகச்சிறந்த உயரிய எழுத்துகள். ஒரு பக்குவப் பட்ட தலைவனின் சரியான வழிகாட்டும் தன்மைகள் நிரம்பிய கருத் துகள். அதிலும் தென்மொழி ஆசிரியவுரை ஓர் உண்மைத் தொண்டுள்ளத்தின் குமுறல்களையும், ஆற்றாமைகளையும், மிகச் சரி யான தன் மதிப்பீடுகளையும் நேரியமுறையில் விரவிவர வெளிப் படுத்தியுள்ளன. ஒரு கால்நூற்றாண்டாகச் செய்துவந்த அறிவுப் பணியின் விளைபயன்கள் சரியாகக் கணிக்கப்பட வேண்டும்.

செலவிடப்பட்ட காலம், வெளிப்படுத்தப்பட்ட அறிவுச் செய்தி கள், பணியின் அருமைப்பாடுகள் ஆகியனவற்றை ஒருசேர எண்ணிப்பார்த்தால் அவை மிக அதிகமானவை, உயர்ந்தவை, போற்றத் தக்கவைதாம். மேலும், இவை யாவும், அசைவிலா ஊக் கமும், பிறழாத கொள்கையும், உறுதியான தன்னம்பிக்கையும், ஆன்ற அறிவும், வீழாத வினைத்திட்பமும் கொண்ட தனி ஒருவரின் முயற்சியே என்பதை எண்ணும்போது, இது ஓர் இமாலய வெற்றி என்றே மதிப்பிடலாம்; மிகையாகாது.

தங்கள் பிழைப்பிற்காக, வளர்ச்சிக்காக அனைத்துக் கரிசு (பாவங்)களையும் கூசாமல் அனைவரும் செய்துவரும் இந்நாளில், மொழி, இன, நாட்டு நலன்களுக்காகவே தனிநலமின்றித் தள

(முன் பக்கத் தொடர்ச்சி)

வாளர்கள் இரா. கந்தசாமி, க. இராமாத்தாள் அவர்களின் தோட் டத்தில் கட்டப்பெற்ற புதிய இல்லத்தைப் **பாவலரேறு பெருஞ்சித் திரனார்** அவர்கள் திறந்து வைத்துத் தமிழின முன்னேற்றம் தொடர் பாக அரியதொரு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். நிகழ்ச்சித் தொடக்கத்தில் பாவலர். மு. பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். தமிழக உழவர் முன்னேற்றச் சங்கம் (வேடசெந்தூர்) தலைவர் வா. சுப்பிரமணி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். ஒட்டன் சத்திரம், தமிழக உழவர் சங்கத்தலைவர் கா. கிருட்டிணசாமி முன்னிலையேற்றார். திருவாளர்கள் தமிழ்ச்சுடர் மணிமுத்து, வ. முத்துச்சாமி, கல்லை. அருட்செல்வன், நாகசுந்தரம், ஒடவை. தமிழ்வேந்தன், வழக்குரைஞர் இரா. தங்கவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒட்டநாகம் பட்டி நல். இளஞ்செழியன் அவர்களின் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

வுணர்வின் நிச் செயல்பட்ட தங்களின் உழைப்பு பயனுடையதுதான்; பாராட்டத்தக்கதுதான். தங்களது உண்மை உழைப்பின் பயன்கள் தாம் தனித்தமிழ் நிலைகளில் பல முன்னேற்றங்களாகவும், பலவகையில் சிறப்பான காப்புகளாகவும் அமைந்துள்ளன.

பதவி பெற்றும், நிலைஉயர்ந்ததும் பின்னர் மாறியும், மழுங்கியும் போன சிலர்க்கு இன்னமும் சில வேளைகளில் மறத்தன்மை இருப்பதற்கு உங்களது அறிவு, தொண்டு ஆகியவற்றின் சிறு படிமானங்கள் தாம் கரணியம். மொழி, இன அடிப்படைகளில் எப்போதேனும் இங்கு இனி ஏதேனும் மாற்றமோ, எழுச்சியோ அடைந்து, அதனால் குறிப்பிடத்தக்க அல்லது வியக்கத்தக்க மாற்றங்கள் நேருமேயானால், அஃது உறுதியாக உங்களால் உருவாக்கப்பட்ட அல்லது வழிநடத்தப்பட்ட அல்லது உங்களின் அறிவாற்றலில் சிறுதுளியேனும் தெளிவாக்கப்பட்டவர்களால்தாம் அவை இயலும். இஃது உறுதியான ஒரு கணிப்பு. தங்களால் தூவப்பட்டுள்ள அறிவுவிதைகள் முளைத்து, வளர்ந்து, செழித்துச் சோலையாகிப் பயன் விளைவிக்கத்தான் போகின்றன. இதில் ஐயமே இல்லை. தங்களது கடும் உழைப்பும் முயற்சியும் வீணாகிப்போகவில்லை, போகவும் போகாது என்பது உறுதி.

தற்போது தாங்கள் உறும் சலிப்பும் ஆற்றாமையும் ஏனென்று உணரப்படவேண்டியவை தாம். தங்களின் தொடக்கக்கால முயற்சியின்போது இருந்த காலச் சூழ்நிலைகள் வேறு. இன்றுவேறு. அன்றைய நிலைகளில், இந்த அளவிற்காவது தென்மொழி அன்பர்களைக் குறிப்பிடத்தக்கவாறு உருவாக்கி, ஓர் இயக்கமாகவே மாற்ற முடிந்தது. ஆனால் இன்றைய சூழலில், அதே வகை அறிவு முயற்சியால் பெரும் அளவில் புதியவர்களை ஈர்க்கவோ உருவாக்கவோ இயலவில்லை என்பது கண்கூடு. தென்மொழியின் பக்குவப்பட்ட அன்பர்களின் கடும் முயற்சியும் உழைப்பும் எதிர்பார்க்கும் அளவிற்குப் பெரும்பயன் விளைவிக்க இயலாமல் இருப்பதற்கும் இன்றைய நாட்டுச் சூழ்நிலைகள்தாம் கரணியம்.

அரசியல் புரட்டுகள், தனிநலக் கயமைகள், பொருள்செய்யும் கீழ்மைகள், அதிகாரக்கேடுகள் ஆகியன பெருகி வளர்ந்து ஓங்காரமிட்டு, ஓலமிட்டுக் கூத்தாடுகின்றன. அவை எல்லா நிலை மக்களின் அறிவுகளையும் ஒரு தேக்கப்படுத்தி இருக்கின்றன; எல்லாருடைய செவிப்பறைகளையும் கிழித்துச் செவிடாக்கி வேறெதுவும் கேட்கப் பெறாது ஆக்கிவிட்டன, தொண்டைக் குழிகளை அடைத்து ஊமைகளாக்கிவிட்டன. கண்களின் ஒளியெல்லாம் பறித்துக் குருடர்களாக்கிவிட்டன. இப்படியாகிவிட்ட அறிவுகேளாச் செவிடர்களிடமும், உண்மை பேசா ஊமைகளிடமும், கருத்துக் குருடர்களிடமும் நாம் என்னதான் ஒலிஎழுப்பி அறிவுச்சங்கூதினாலும் என்ன பெரும்பயன் ஏற்பட்டுவிடப்போகிறது? ஏற்படமுடியும்? எங்கே வழி இருக்கிறது? அறிவுதரும் இடங்களை நோக்கவும், கேட்கவும், அணுகிவரவும், அடையவும் இயலாதவாறுதான் மக்களின் எல்லாப்

புலன்களும் செயல் அழிக்கப்பட்டு, எல்லாப் பாதைகளும் அடைக்கப்பட்டல்லவா இருக்கின்றன? இவற்றை உணராமல் நாம் என்னதான் அறிவு விளக்கேற்றினாலும், முழங்கினாலும் அவை எப்படி அவர்களை எட்டும்? எனவே தங்களது இனமான நிலை, அரசியல் நிலை, உரிமைநிலை ஆகியவற்றின் அடிப்படை உண்மைநிலைகளை நம் மக்கள் பெறச்செய்ய வேண்டும்.

அறிவுவழி முயற்சி மிகச்சிறந்ததுதான். ஆனால் இருக்கும் உண்மையான சூழல்களையும், நடைமுறைகளையும் கவனிக்க வேண்டும். அறிவுமுயற்சி முழுவதும் உடனடி வெற்றிபெற இன்று வாய்ப்புகள் குறைவு. வெற்றியே பெற்றாலும், ஆகும் நீண்ட நெடுங்காலத்திற்குள் நம் மொழியும் இனமும் உருத்தெரியாமல்போய்விடக்கூடும். எனவே மக்களின் அறிவுநிலைக்கொப்ப, அனைவர்க்கும் புரியும் வண்ணம் நாம் ‘இறங்கி’ வந்தேனும், நடைமுறைக்கேற்ப, உலகியல் முறைக்கேற்பச் செயலாற்றவேண்டியதே முதன்மையானது. இனியும் தெளிவாகக் கூறவேண்டுமானால்; நீங்கள் மிக எண்ணி, ஆராய்ந்தெடுத்த முடிவுதான் சரியானதாகும். அஃதாவது ‘தென்மொழி’ வழியைவிட இன்றைக்குத் ‘தமிழ்நிலம்” வழிதான் பொருத்தமானது. காலமறிந்தது, இடமறிந்தது.

பரபரப்பு, விளம்பரம் கருதிப் பிறர் செய்யும் அரசியல் கோமாளித்தனங்களை, புரட்டுகளை, நாணத்தக்கவற்றை நாமும் செய்யவேண்டும் என்று எந்தத் தென்மொழி அன்பரும், உ.த.மு.க.வினரும் எள்ளளவும் எண்ணமாட்டார். விரும்பமாட்டார். ஆனால் நடைமுறையில் ‘ஒன்றுமே இல்லாததுகள்’ ஆடும் ஆட்டங்களைப் பார்க்கும்பொழுது, நாமும் நம் தகுதிகளை வெளிப்படுத்த ஏதேனும் செய்யவேண்டும் என்று நம்மவர்கள் துடிப்பது இயல்புதானே. தவறல்லவே.

ஆனாலும் இப்போது தங்களின் ‘ஊக்கம் உடையான் ஒடுக்கம்’ பற்றிய விளக்கம் பெற்றபின் எவரே அவற்றை விரும்புவர்? எனவே' தென்மொழி நிறுத்தவேண்டிவருவது ‘தமிழ்நில’த்திற்கும் உ.த.மு.க'விற்கும் முழுமுயற்சியோடு ஈடுபடவே என்ற தங்களின் நிலைவிளக்கம் காலமறிந்து செயல்படும் ஒன்றாகவே தெரிகிறது. தென்மொழித் தொண்டியக்கத்தில் இஃது ஒரு சரியான மாறுதலே என்று கொள்ளலாம். ‘தமிழ்நிலம்” வழித் தங்கள் தொண்டியக்கம்தான் பயன் விளைவிக்கப்போகிறது என்பது உறுதி. இந்த எண்ணங்களால்தான், நம்பிக்கையால்தான், எதிர்பார்ப்புகளால்தான் எரிமலையன்ன தங்களின் குமுறல்களையும், ஆற்றாமைகளையும் சரியென நயன்மைப்படுத்தி அமைதிகாண முடிகிறது. தங்களின் காலமுணர்ந்து மாறிச்செயல்படும் முயற்சிகளின் விளைவுகள் நலமேயாகும். வெற்றியேபெறும். இவை திண்ணம். தங்களது மேற்சொன்ன எழுத்துகளின் வேகம் தங்கள் தொடர்பினை மிக அண்மையிலேயே பெற்றுள்ள எனக்குத் தந்த எண்ணங்களை எழுதியுள்ளேன். வணக்கம்.

— **மா. ஆறுமுகம்**, பல்லடம்.

'பூந்தமிழ் பேணப் புறப்படுவீர்!'

புலவர். நாவை. சிவம், இல,இ.கல்.இ., மணப்பாறை.

எந்தவொரு சிற்றுயிரும் இன்பமுறும் வண்ணம்
சிந்தையணு வில்நிறைந்து செம்மையெலாம் தந்து
விந்தைசெயல் செய்வதற்கு வேட்கையினைத் தூண்டும்
செந்தமிழை முந்தியதும் எந்தமொழி சொல்வீர்!

கற்றுணர்ந்த நல்லறிஞர் கற்பனையைப் போற்றி
நெற்றெனவே நற்கருத்தை நெஞ்சினிலே தோற்றி
உற்றறியும் ஐம்பொறிக்கும் ஒப்பரிய இன்பம்
நற்றமிழ்போல் மற்றைமொழி நல்கிடுமோ சொல்வீர்!

(வேறு)

கமழும்நறு மலரில்நிறை கவிஞர்இளம் நெஞ்சீர்!
குவியும்புகழ் தனிலும்நலம் குலவுமுயர் இன்பம்
அமையும்நனி அறிவின்நிலை அனைத்துமினி தூட்டும்
தமிழின்சுவை அமிழ்தின்சுவை தனைவிஞ்சிய தென்பீர்!

கலியின்நிலை கலையின்எழில் கரும்பின்தெறல் போலும்
பனியின்மலர் நறவின்சுவை பளிங்கின்ஒளி போலும்
தனிமைநிலை தனிலும்வளம் தழைத்தே உயர்ந்தோங்கும்
இனிமையெனும் தமிழேஉயிர் எனவேஉரை செய்வீர்!

(வேறு)

முந்தியே தோன்றி மொய்ம்பெலாம் பெற்ற முதலினத்தீர்!
நந்தமிழ் ஏத்தீர்! நல்லுணர் வற்றீர்! நலிவடைந்தீர்!
பிந்தியே வந்தார் பெற்றிமை யுற்றார்! பிணியகன்றார்!
சிந்தனை செய்வீர்! செந்தமிழ் பேணும் செயல்புரிவீர்!

சிந்திடும் இன்பச் சீர்கலை பெற்ற திருக்குலத்தீர்!
தொந்தியே காத்தீர்! தொல்புகழ் நீத்தீர்! துணிவிழந்தீர்!
வந்தவர் வாழ்ந்தார்! வன்மைகள் பெற்றார்! வளமடைந்தார்!
பொந்திகை நல்கும் பூந்தமிழ் பேணப் புறப்படுவீர்!'

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

— தி. குமரப்பன், க.இ.

புறப்படலாம் என்பதற்கு அடையாளமாக ஊதலை ஊதிவிட்டு 'யாரய்யா நிற்பது? உட்காருங்கள்' என்ற நடத்துநர் தொடர்ந்து 'அந்த மூன்றுபேர் உட்கார்ந்திருக்கும் இருக்கையில் தள்ளி உட்கார்ந்து இடம் கொடுங்கள்' என்றார்.

'டேய் முத்து, நீ அந்தப்பக்கம் மாறி உட்கார், சின்னச்சாமி உட்காரட்டும்' என்றார் கருப்பன். 'நீங்க சும்மா இருங்கப்பா; என் பக்கத்தில் உட்கார்ந்தால் குறைந்தா போய்விடும்?'

'ஏன்டா, நாம் என்ன குலம், அவர்கள் என்ன குலம்? உன் ஓரத்தில் அவர் உட்காரலாமா? வம்பு செய்யாமல் மாறி உட்கார்".

'அதெல்லாம் முடியாது. விரும்பினால் என் பக்கத்தில் உட்காரட்டும். இல்லாவிடில் நின்றுகொண்டு வரட்டும். உங்களுக்கென்ன பெரிய அக்கறை'?

அதற்குள் நின்றுகொண்டிருந்த கண்ணன் அடுத்த இருக்கையில் இருந்த ஒருவரை முத்துவின் பக்கம் மாறி உட்காரச்செய்து விட்டு, அந்த இடத்தில் அமர்ந்துகொண்டு 'என்னடா கருப்பா, கண்ணாடி போடப்போகிறாயா? சிவகங்கையில் அப்பாவைப் போய்ப் பார்த்தாயானால் அவரே எல்லா ஏற்பாடும் செய்வார்.'

'பார்த்தாயாடா முத்து. நீ அந்தச் சின்னச்சாமியோடு எப்போதும் வம்பு பண்ணுகிறாயே. இப்பொழுது பார்த்தாயா, நீ வம்பு செய்தபோதும் எனக்கு உதவ முன் வருவதை'.

'போங்கப்பா, நீங்கவேறு. நீங்கள் எந்தக்காலத்து ஆள். அவன் நேற்றுப் பிறந்தபயல் உங்களைப் பார்த்து 'என்னடா' என்று 'டா' போடுகிறான். அவன் அப்பா நீங்கள் போனவுடன் உதவுவதற்குப் பாய்ந்துதான் வருவார். நீங்கள் நன்றாய் இருந்தவரை நன்றாக வேலை வாங்கிவிட்டுக் கண் தெரியாமல் போனவுடன் அம்போவென்று வேலையை விட்டு நீக்கிவிட்டார். வேலையை விட்டு விலக்கும்போதாவது இவ்வளவுநாள் மாடாய் உழைத்ததற்குக் கொஞ்சம் பணம்கூடக் கொடுத்து விலக்கவில்லை. ஏன், அப்போதே அவர் செலவு செய்து உங்கள் கண்ணைக் குணப்படுத்தியிருக்கலாமே".

'சரி! சரி! உனக்கு எப்போதுமே அந்த ஐயா வீட்டுப் பிள்ளைகளைப் பிடிக்காது'.

'எனக்கு என்ன அவர்கள்மேல் வெறுப்பா? அப்படி ஒன்றும் இல்லை. அன்புக்குக் கட்டுப்படலாம். ஆணவத்திற்கு அடிபணியக் கூடாது. மக்களுக்குள் எதற்கு உயர்ந்தகுலம், தாழ்ந்தகுலம் என்ற வேறுபாடு'?

'உன்னோடு பேச என்னால் ஆகாது. ஊரில்தான் வம்பு என்றால் வந்த இடத்திலுமா? பேசாமல் வா".

சிவகங்கையில் வண்டி நின்றது. கண்ணன் இறங்கியவுடன் எதிரில் இருந்த சைவ உணவு விடுதியில் சென்று 'ஒரு குளம்பி (காபி) கொண்டாப்பா' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

முத்துவும் கருப்பனும் இரண்டு வரிசை தள்ளி அமர்ந்தனர். முத்து 'இரண்டு குளம்பி; ஒன்று சர்க்கரை போடாமல் கொண்டுவா' என்றான். கருப்பனுக்குச் சர்க்கரை நோய்வேறு.

சிறிது நேரத்தில் வேலையாள் மூன்று குளம்பி கொண்டுவந்து வைத்தான். உடனே முத்து 'ஏனப்பா, சர்க்கரை போடாத குளம்பி எது?' என்றான். 'ஐயையோ மாற்றி வைத்துவிட்டேனே' என்று சொல்லிக்கொண்டே கண்ணன் முன் இருந்த குளம்பியைக் கருப்பன் முன்னும், கருப்பன் முன் இருந்த குளம்பியைக் கண்ணன் முன்னும் மாற்றி வைத்தான்.

உடனே கண்ணன் 'எனக்கு இந்தக் குளம்பி வேண்டாம். வேறு கொண்டு வா' என்றான்.

'பெரியவர் அந்தக் குளம்பியைத் தொடக்கூட இல்லைங்க. சும்மா குடியுங்கள்' என்றான் வேலையாள். 'அதெல்லாம் முடியாது. எனக்கு வேறு கொண்டுவா' என்றான் கண்ணன்.

'இவர் முன் வைத்த குளம்பியை அவன் குடிக்க மறுத்தால் அவன் முன் வைத்த குளம்பியை மட்டும் இவர் குடிக்கலாமோ? இதுவும் வேண்டாம். வேறு குளம்பி கொண்டுவா' என்றான் முத்து.

அதற்குள் 'அங்கே என்ன குழப்பம்?, என்று அங்கே வந்த முதலாளி 'சரி சரி அம்பிக்கு வேறு குளம்பி கொண்டு வந்து கொடு" என்று கண்ணனுக்கு வேறு குளம்பி கொடுக்கச் செய்தார்.

'டேய் முத்து, ஏன் வீண் வம்பிற்குப் போகிறாய்? அதுசரி இப்போ எங்கே போவது? பெரியசாமியைப் போய்ப் பார்க்கலாமா?'

'பெரியசாமியையும் பார்க்கவேண்டாம், சின்னச்சாமியையும் பார்க்கவேண்டாம். அரசிலிருந்து இலவயக் கண் அறுவைக் குழு நடத்துகிறார்கள். யார் உதவியும் வேண்டியதில்லை, அவர்களை கவனித்துப் பார்த்துக் கண்ணாடி போட்டால் மட்டும் போதும் என்றால் கண்ணாடி போட்டு அனுப்பிவிடுவார்கள். அறுவை செய்ய வேண்டுமென்றால் ஐந்தாறு நாட்கள் அவர்கள் செலவிலேயே தங்க வைத்து அறுவை செய்து அனுப்பி வைப்பார்கள்'.

'சரி' என்னை எப்படியாவது சேர்த்துவிட்டு, நீ இன்று இரவே கடைசி வண்டியில் ஊருக்குத் திருப்பிவிட வேண்டும். செல்விமட்டும் வீட்டில் தனியாக இருக்கும்'.

'பார்க்கலாம். உங்களை உடனே சேர்த்துவிட்டால் நான்போய் விடுகிறேன். இல்லாவிடில் நாளை தான் போகவேண்டும். ஓர் இரவுதானே!'

திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துசமயம்

சிந்தனைச் செம்மல் — **கு.ச. ஆனந்தன்**

சாதிப் பிரிவினை, புனிதமானது, இறைவழி காட்டுவது; உயிரிய(ஆன்மீக)த்திற்கு அடிப்படையானது என்ற நம்பிக்கைகளை யும், வெறி உணர்ச்சிகளையும் ஊட்டுகின்ற இந்து சமயத்தின் உள்ளார்ந்த தாக்கத்தினால்தான் சாதிகளை மக்கள் தம் வாழ்க்கை அமைப்பாக ஏற்றுக் கொண்டுவிட்டனர். சாதிக் கொடுமைகளும் தலைவிரித்து ஆடுகின்றன.

எனவே சாதிய முறைக்கும் அதன் கொடுமைகளுக்கும் பல்வேறு சாதிகளைச் சார்ந்த மக்களோ அல்லது பார்ப்பனர்களோ குற்ற வாளிகள் அல்லர். **இன்றுள்ள இந்து மதம்தான் உண்மைக் குற்ற வாளி.** சாதியைக் கடந்து வந்த பார்ப்பனர்களைக்கூட இந்துமதம் ஏற்பதில்லையே! குமுக மாற்றத்தின் உண்மை எதிரிகள் யாரெனில், சாதிகளையும் மரபுகளையும் சடங்குகளையும் ஒழுக்க(ஆசாரங்)களையும் வற்புறுத்தும் இந்துச் சாத்திரங்களும், அவற்றை வளர்க்கும், பார்ப்பனர்களும் சாதிவெறியினருமே ஆவர்.

மக்களின் மூடநம்பிக்கைகளுக்கு இந்து மதம்தான் காரண மென்பதை யாரும் எளிதாக மறுத்துவிட முடியாது. அதில் அடிப் படையான மாற்றத்தைக் காணும்வரை, குமுக மாற்றம் என்பது வெறும் கானல்நீர்தான்.

இந்து குமுகாயம்'

'இந்துக் குமுகம்' (Hindu Community) என்ற ஒரு தனிக் குமுகம உண்டா? 'இந்து' எனத் தம்மை அழைத்துக் கொண்டவர் களிடம் ஒரே சமய அமைப்பில் எழும் இயல்பான குமுக உணர் வுண்டா? ஒவ்வொரு சமயத்திற்கும் இறைவன், மாந்தன், உலகம் பிறப்பு, இறப்பு பற்றிய தனித்தனி மெய்யியல் கோட்பாடுகள் (Philosophy) உண்டு. இந்துமதம் பல சமயங்களின் கூட்டுத் தொகுப்பு என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இந்துமதத்தின் உள்ளடக்கமான பல்வேறு சமயங்களில் கடவுள், மாந்தன், உலகம் போன்றவற்றின் தொடர்பு பற்றிக் கூறும் மெய்யியல் பகுதிகள் வெவ்வேறாக உள்ளன, முரண்பட்டும் உள்ளன. **ஆனால் அவை யாவும் பிறவிச் சுழற்சிக் கொள்கை, சாதி—குல அமைப்பு முறை ஆகியவற்றில் மட்டும் ஒன்றுபடுகின்றன.** சான்றாக மெய் யியல், கோட்பாடுகளில் சைவத்தின் பல பிரிவுகளும், சைவக் கொண்முடிபும், (சித்தாந்தமும்) இருமைக் கோட்பாடும்(துவைதமும், இரண்டன்மைக்கோட்பாடும்(அத்வைதமும்),மாலிய(வைணவ)த்தின் பிரிவுகளும் மத்துவர் கொள்கையும்(மாத்துவமும்), ஒன்றுக்கொன்று

மாறுபட்டவை. என்றாலும் சைவம் மற்றும் மாலிய (வைணவ)த்தின் குறிப்பிட்ட பிரிவினர் தவிர, மற்ற அனைத்துப் பிரிவுகளும் 'சாதிய அமைப்பு முறையையும்', 'வருணப் பாகுபாட்டையும்', 'பிறவிச் சுழற்சிக் கொள்கையையும்' நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏதோ ஒரு வகையில் ஏற்றுக் கொள்கின்றனர். ஆரியசமாசம், பிரம்ம சமாசம் போன்றவை வருண வேறுபாடுகளை ஏற்றுக் கொள்கின்றன. வீரசைவம் மட்டும் சாதியத்தையும், வருணப் பகுப்பையும், ஏற்றத் தாழ்வையும் மறுக்கும் சமயம்; அதன் மெய்யியல் கொள்கையும், தனித்தன்மை வாய்ந்தன.

ஒவ்வொரு சமயக் கூறும் (Cult) சடங்கு, மரபுகள், ஒழுகலாறுகள் (ஆசாரங்கள்), ஆகியவற்றில் மாறுபட்ட சில தனித்தன்மைகளைக் கொண்டு இயங்குகின்றன. ஒவ்வொன்றின் வழிபாட்டு முறைகளும், இறைநெறிகளும், சமயப் பழக்கவழக்கங்களும் மாறுபட்டவை. எனவே ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியானவர்கள் என்ற உணர்வால் உந்தப்பட்டு 'இந்து சமயம்' என்ற பிடிப்புக்குள் தனித்தனிக் கூறுகளாகப் பிணங்கி நிற்கின்றனர். பல நூற்றாண்டுகளாக இந்தப் பிரிவுணர்ச்சி வளர்ந்து விட்டதால், இன்றைக்கும் அச்சமயக் கூறுகளைச் சார்ந்த மக்கள் குழுக்களுக்குள், ஒற்றுமை என்பது அறவே கிடையாது. **ஓர் இசுலாமியனுக்கும், ஓர் இந்துவுக்கும், எந்த அளவிற்கு முரண்பாடும், பாகுபாட்டு உணர்ச்சியும் உள்ளனவோ, அந்த அளவிற்கு ஓர் இருமைக் கோட்பாட்டனும், ஒருமைக் கோட்பாட்டாளனு (அத்வைதி)க்கும் இடையேயும், ஒரு சைவனுக்கும் வைணவனுக்குமிடையேயும் இருப்பதைக் காணலாம். என்றாலும் அவர்களும் இந்துக்களே!**

அதற்கடுத்து வருவன சாதிகள்; வட இந்தியாவைக் காட்டிலும் தமிழகத்தில் சாதிகளின் தொகை அதிகமாக உள்ளது. ஏறத்தாழ ஈராயிரம் சாதிகளும், உட்பிரிவுகளும் தமிழகத்தில் உள்ளன என்று கூறுகின்றனர். ஒவ்வொரு சாதிக்குள்ளும் பல உட்பிரிவுகள் உண்டு. அந்தந்த சாதிக்குரிய தெய்வங்களும், மரபுகளும், சடங்குகளும், பழக்கவழக்கங்களும், கொள்வினை—கொடுப்பினை முறைகளும், பொதுவாக **குமுகத் தொடர்புகளும்** (Social Contacts) வேறானவை. அனைத்துச் சாதியினருக்கும் உரிய ஒரே வகையான வழிபாட்டு முறையோ, சமயப் பழக்கங்களோ (Religious Practices) கிடையாது. தனித்தனிச் சாதிக் கோயில்களும் உண்டு. எனவே ஒவ்வொரு சாதியினரும் தனித்தனிப் பகுதியினர் என்ற உள்ளுணர்வுடனேயே இன்றும் இயங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு சாதியினரும் தம்மை உயர்வான சாதியினர் என்றும் மற்ற சாதியினரைத் தாழ்ந்தவர்கள் என்றும் கருதுகின்றனர். உணர்வு நிலையில் ஏற்றத்தாழ்வுகள் அரும்புவதோடு மட்டுமின்றி ஒவ்வொரு சாதியினரின் அனைத்துச் செயல்முறைகளிலும் அவ்வுணர்வு விரிந்து வளர்ந்து பரந்து விடுகின்றன. அறிவு நிலை

யிலும்கூட ஒரே சாதியைச் சார்ந்த மக்களுக்குள்தாம், ஒற்றுமை உணர்ச்சி காணப்படுகிறது. ஒரு சாதியினர், மற்றொரு சாதியினரை ஏதோ ஒரு வகையால் வேற்று நிலையினர் என்றே கருதுகின்றனர் எனவே சாதிய அமைப்புத் தந்த மற்றொரு தீயவிளைவு. இகல்-(மாறுபடுவது) பல்வேறு சாதிகளுக்குள் ஒருமைப்பாட்டு உணர்ச்சியின்மை.

இந்து சமயம் பெற்றெடுத்த சாதிகளுக்குள் அவ்வப்போது பகையுணர்ச்சி பொங்குவதற்குக் கரணியம் 'இந்து' என்ற ஒரே சமய உணர்வு அவர்களுக்குள் இயல்பாக இல்லாததேயாம்.

தீண்டாமைக்கு ஆட்பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் நிலையோ இன்னும் கொடியது. 'தரும சாத்திர'ங்கள் வகுத்த வருண அமைப்புக்கும் சாதித் தாழ்மைக்கும் உட்பட்ட 'பஞ்சமர்களாகப்' பல நூற்றாண்டுகளாக அவர்கள் ஒதுக்கப்பட்டு விட்டமையால், மேல் சாதியினருக்கு எவ்வகையிலும் தொடர்பற்ற தனித்தன்மை கொண்ட வழிபாட்டு முறைகள், சமயப் பழக்கவழக்கங்கள், சிறு தெய்வங்கள், சடங்குகள், மரபுகள், போன்றவை பஞ்சமர்களிடம் ஆழமாகப் பதந்துவிட்டன.

தாழ்த்தப்பட்டவர்களை, மற்ற மேல்சாதியினர் எவரும் சமயத்தால் தன்னோடு இயைந்த உறுப்பினர்கள் எனக் கருதுவதே இல்லை. உரோம்நாட்டு அடிமைகளுக்கும், உரோமானியப் பெருமக்களுக்கும் இருந்த அடிமை-ஆண்டான் உறவுதான், தாழ்த்தப்பட்டவருக்கும் மேல்சாதியினருக்கும் உள்ள 'சமயத் தொடர்பு" ஆகும். இந்து சமயத்தின் அனைத்துப் பகுதியனரும் தாழ்த்தப்பட்டவர்களைத் தீண்டப்படாதவர்கள்' என நெடுங்காலம் வெறுத்து ஒதுக்கித் தனிமைப்படுத்திவிட்டதால், 'இந்து' என்ற உணர்வே அவர்களிடம் என்றும் இருந்ததில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்குக் குமுகாயத்திலும், கல்வியிலும், அரசு அலுவல்களிலும், தரப்பட்ட சிறுசிறு உரிமைகளின் காரணமாக, அவர்களும் தம்மை 'மாந்தர்கள்' என்று சில ஆண்டுகளாகத்தான் உணரத் தொடங்கியுள்ளார்கள். அந்தச் சிறு விழிப்புணர்ச்சியைக்கூட, உணர்வு நிலையில் ஏற்க மறுக்கின்றனர், மற்ற மேல்சாதியினர். இகல் மூள்கிறது; வெறுப்புணர்ச்சி வளர்கிறது; மேல்சாதியினர் பொங்கி எழுந்த தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தாங்கவொண்ணாக் கொடுமைகளை இழைக்கின்றனர்.

இந்து—முசுலிம் கலவரங்கள் இப்போது அருகிப்போய்விட்டன. இந்துக்களுக்கும், மற்ற சமயங்களுக்குமிடையேகூட அடிக்கடி பிணக்குகள் நிகழ்வதில்லை. ஆனால் இன்றைய நிலையில் இந்துமதம் என்ற ஒரே கட்டுக்கோப்புக்குள் இயங்கி வரும் பல சாதிப்பிரிவினர்களிடையே, நடக்கும் போராட்டங்களும் வன்முறைச் சம்பவங்களும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

கண்ணீர் வடிக்கின்றன நெஞ்சங்கள்!

18. தங்களைவிட யாரும் செய்துவிட முடியாது!

அன்புள்ள ஐயா அவர்களுக்கு, என்பணிவும் நல்லெண்ணங்களும்.

ஐயா; எனக்குத் தென்மொழி வட்டம் புதியதென்றாலும், அதனுடைய வழிநிலை மரபினரை உணர்ந்து கொள்ள முடிகிறது. தங்கள் மீது மதிப்புக் கொண்டிருப்பவர்கள் நயத்தக்க நாகரீகம் படைத்தவர்களாயிருப்பதை உணர முடிகிறது.

எங்களுடைய அறிவாளித்தனமான வலுக்குறைவுகளைக் கண்டு எங்களை ஒதுக்கிவிடாதீர்கள். இந்த வலுக்குறைவுகளோடு வாழ்ந்து மடிவதில் எங்களுக்கும் விருப்பமில்லைதான்.

தங்களுடைய முன்னெடுத்துக்காட்டான வாழ்க்கையும், உண்மை வழிப்பட்ட எழுத்தும் இன்னும் பெரிய ஈகங்களுக்கு எங்களைத் தூண்டவில்லையென்றாலும், நாங்கள் ஓரளவு நாகரீகமாகவும், பொறுப்போடும் நடந்துகொள்வதும், இனநலப் பின்னணியில் சிந்திக்கக் கற்றுக் கொண்டதும் தங்களின் தாக்கத்தால்தாம்.

ஐயா அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஐயாவைப் போல் வாழவேண்டி, அடிமனத்தில் ஆசைகளை வளர்த்துக்கொண்டு, நாளும் நாளும் நாங்கள் வளர்ந்து கொண்டிருப்பதாகவே நம்புகிறோம். எங்களிடமிருக்கின்ற விரைவின்மையைக் கண்டு ஐயா துயரப்படுவது புரிகிறது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

"சாதி என்ற நோய் இந்துக் குமுகத்தைச் சின்னாபின்னமாக்கிச் சீரழித்து விட்டது. இந்துக் குமுகம் என்ற சொல்லுக்கே பொருளில்லை. அது வெறும் கற்பனைதான் ...... இந்துக் குமுகம் என்பது, உண்மையில் பல சாதிகள் சேர்ந்த ஒரு கதம்பமேயாகும்... ஒவ்வொரு சாதியாரும் தனியாகப் பிரிந்து நின்று, மற்ற சாதிகளுக்கும், தனக்கும் தொடர்பில்லை என்ற உணர்ச்சியுடன் இயங்குகிறார்கள்......இந்துக்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சி என்பதேயில்லை. நாம் எல்லாம் இந்துக்கள்தாம் என்ற ஒரு பொதுவுணர்ச்சி, யாருக்கும் ஏற்படுவதில்லை. தனித்தனி சாதியுணர்ச்சிதான் முனைந்து நிற்கிறது. அதனால்தான் இந்துக்கள் ஒரு **குமுகமாகவோ** (Society) **நாட்டினமாகவோ** (Nationality) வாழமுடியவில்லை" என்று இந்து குமுகம் பற்றி **(டாக்டர்.) பர். அம்பேத்கார்** அவர்கள் 1936-ஆம் ஆண்டிலேயே தெளிவாக உணர்த்துகிறார். (தொடரும்)

எங்கள் குறைபாடுகளோடு எங்களை ஏற்றுக் கொண்டு, இன்னும் உயர்வான இடத்திற்கு எங்களை உந்தித் தள்ளும் பொறுப்பைத் தங்களைவிட ஒப்படைப்போடு யாரும் செய்துவிட முடியாது. எங்களை இயக்கவழியாக ஒன்றுபடுத்த உ.த.மு.கவை வலுப்படுத்துங்கள்; அதேநேரத்தில் எங்கள் மூளையணுக்களை அதிர்விக்க அறிவு வழியாகவும் ஏதேனும் தாங்கள் செய்தாகத்தான் வேண்டும்.

எந்தெந்தக் கரணியங்கள் தங்களைத் 'தென்மொழி' வெளியீடு பற்றி ஆய்வு செய்ய வைத்தன என்பதை என்னால் உணர முடிகிறது. அந்தந்தக் கரணியங்கள் என்னைத் தாக்காது பார்த்துக் கொண்டு, மற்றவர்களையும் அதிலிருந்து விடுபடச்செய்ய முயற்சிகள் செய்வேன். தங்களுடைய முயற்சிகளுக்கு நான் கருவியாகும்படி என் வாழ்க்கை அமைவதாக! அன்போடும், பணிவோடும்.

— சீ. அரங்கசாமி க.மு. உதவிப் பேராசிரியர்,
குமுகப்பணிக் கல்லூரி, மதுரை-2.

19. இனி எங்ஙனம் எங்கள் தமிழறிவைப் பெருக்குவோம்?

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

தமிழ்த்தாயின் இனிய பெயரால் வணக்கமும் வாழ்த்தும் கூறுகின்றேன். நமது தென்மொழி (சுவடி கஅ, ஓலை, ரு) இதழ் கண்ணுற்றுத் தாங்கொணாத் துயரம் அடைந்தேன். தாங்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களின் பட்டறையை மூடத் தீர்மானித்து விட்டமையைத்தான் குறிப்பிடுகின்றேன்.

ஐயா! என் போன்ற இளஞ்சிறார்கள் (அகவை 30 க்கு மேல் ஆகிவிட்ட தெனினும் தமிழறிவில் எனபோன்றோர் சிறுவர்கள் தாமே) இனி எங்ஙனம் எங்கள் தமிழறிவைப் பெருக்குவோம்? தங்களைப் போன்ற உண்மை ஆசான் எங்களுக்கு இல்லையே! தென்மொழியோடு ஒன்றரை ஆண்டுக் காலமாக மட்டுமே இணைத்துக் கொண்ட எனக்கே இச்செய்தி பேரிடியாகத் தோன்றுகிறதெனில், 24-ஆண்டுக் காலமாகத் தங்களை இணைத்துக் கொண்ட அன்பர்களின் உள்ளம் எத்துணைத் துயருறும் என்பதை ஐயா அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என் வழித் தோன்றல்களான, என் செல்வங்கள் தமிழ்ச்சிட்டு வாயிலாக, தமிழைச் சிறந்த முறையில் கற்பார்கள் என்றல்லவோ எண்ணியிருந்தேன்? எனது தமிழார்வத்தைத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு வாயிலாகக் கொழுந்து விட்டு எரியச் செய்தீர்கள். அதை இக்கால் தாங்களே அணைத்துவிடப் பார்த்தீர்கள்.

இனி, எப்பட்டறையில் எங்கள் அறிவென்னும் உளிகளைக் கூர்மையாகச் செதுக்குவோம்? என் துயரங்களை என்னால் சொல்லில் வடிக்க இயலவில்லை. எனவே, தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்

கொள்ளுகின்றேன்; இரண்டு இதழ்களையும் நிறுத்திவிடாதீர்கள். நீங்கள் கற்பித்தபடியே, தங்கள் மனம் போல் இனி எளியவர்கள் நடுவிலும் தமிழ்த் தொண்டு செய்வேன் என உறுதியளிக்கின்றேன். தங்களைக் குறைகூறும் பதர்களைப் பற்றிக் கவலற்க. எண்ணித் துணிக கருமம். என்னைப் போன்ற இளைஞர்கள் தங்களுக்குத் தோள் கொடுக்க எப்போதும் அணியமாக உள்ளோம். பணியழுத்தம் மிகுதியாக இருப்பின், இப்பணிகளைப் புரப்பாளர்கள் குழுவிலிருந்து ஒருவரைத் தெரிந்தெடுத்து, அவரை நடத்தும்படி பணித்து விட்டு, தாங்கள் 'தமிழ்நிலத்'தைப் பண்படுத்துவதில் முழுமூச்சாக இறங்கலாம். என் உள்ளக் கிடக்கைகளை எழுத்தில் வடித்தேன்; அவ்வளவே. ஐயா அவர்கள் சிந்தித்துச் செயல்பட பணிவுடன் வேண்டுகின்றேன். (எனது சிற்றறிவுக்கு எட்டியவற்றை எழுதினேன்) அதன்பின் தாங்கள் எம்முடிவு எடுத்தாலும் அதை ஏற்கின்றேன். பணிவான வணக்கம் கூறி விடைபெறுகிறேன். தங்கள் தன்னலமற்றத் தொண்டால் தங்களிடம், தங்கள் இயக்கங்களில் ஈர்க்கப்பட்ட, தமிழ்த் தொண்டன், — **த. தானியல் செபராசன்**, பால்கோ நகர். (ம.பி)

20. எங்களுக்கு மிகுந்த ஏமாற்றமே ஏற்படுகிறது!

மதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு வணக்கம் பற்பல தங்கள் திருப்பாதங்கட்குச் சாத்துகிறேன். நான் பள்ளியிறுதி வகுப்புவரை படித்துமேலும் தட்டச்சு முதுநிலையில்தேர்வு பெற்று வேலைகிடைக்காமலும் இருந்ததால் குடும்ப நிலை காரணமாக இப்பொழுது தேநீர் விடுதி ஒன்றில் பணிபுரிகிறேன். என் தந்தையார் மொழிப்பற்று மிக்கவர். தி.மு.க. உறுப்பினர் என்பதால் நானும் சிறு அகவையிலிருந்தே மொழிப்பற்று மிக்கவனுகவே வளர்ந்து விட்டேன். நான் கடந்த இரண்டு ஆண்டுகளாகவேத் தொடர்ந்து தென்மொழி இதழ் படித்து வருகிறேன். தங்களைத் தி.க. மாநாட்டிலும், உ.த மு.க. தொடக்க விழாவிலும் பார்த்துத் தங்கள் சொற்பொழிவைக் கேட்டு உணர்வு பெற்றிருக்கிறேன். எனக்குத் தெரிந்த தமிழன்பர்களிடமும் தமிழ் உணர்வு ஏற்பட என்னுல் ஆன செயலைச் செய்து வருகிறேன். இந்நிலையில் தாங்கள் சுவடி 19 ஓலை 5-இல் எழுதியுள்ள, 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' படித்ததும் மிகவும் துயரப்படுகிறேன். பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய இளைஞர்களைக் கெடுக்கும், திரைப்படக் கவர்ச்சிமிக்க இதழ்கள் வந்து கொண்டிருக்கும் இந்நாளில், என் போன்றவர்களுக்குத் தென்மொழிதான் ஓர் இன உணர்வுமிகுந்த இலக்கிய இதழாகவும் தமிழ் மக்களுக்குப் பயனுள்ள இதழாகவும் வெளிவந்து எங்களை நிறைவு செய்து கொண்டிருக்கிறது. தாங்கள் இதை நிறுத்திவிடபோகிறேன் என்பது எங்களை மிகுந்த ஏமாற்றத்திற்கு ஆட்படுத்துகிறது துயரம் ஏற்படுகிறது.

ஆனால் அதற்கீடாகத் தமிழ்நிலமும் உ.த.மு க. இயக்கமும் வலிவுபடுத்தப்பெறும் என்று கூறுகிறீர்கள் இதன் மூலம் நான் ஆறுதல் அடைகிறேன். தொடர்ந்து தமிழ்நிலத்தில் சந்திப்போம்.

தங்கள் மீது மிகுந்த பாசம் நிறைந்த, — **பொ. மாரிச்சாமி.**

திருச்சிராப்பள்ளி-1.

21. தென்மொழி உணர்வோடு-உயிரோடு கலந்தது? எப்படி மறக்க இயலும்?

அன்புநிறை தென்மொழி ஐயா, வணக்கம். நலம், நலமே விளைக. தென்மொழி நிறுத்தப்படும் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன். 1963-ஆம் ஆண்டிலிருந்து—நான் ஏழாம் வகுப்பு மாணவனாக இருந்ததிலிருந்து தென்மொழி படித்தும், பிறகு தமிழ்ச்சிட்டோடு பழகியும் என்னால் இயன்ற அளவு பறக்க விட்டும் இன்புற்று வந்தேன். தமிழ்ச்சிட்டு மாணவர்களிடையே பறக்க வேண்டி, பெருஞ்செலவினை நானே ஏற்றுக் கொண்டாலும் இன்புற்றே மகிழ்ந்தேன்.

நிற்பது கண்டு துன்புற்றாலும், தாங்கள் தென்மொழியில் எழுதியவற்றைக் கொட்டிய உணர்வை நன்கு உணர்கிறேன். அனைத்தும் உண்மையே! தாங்கள் ஏற்றிக் கொண்டுள்ள சுமையினை உணர்கிறேன். இந்தச் சுமையினை மாற்றவோ மாற்றிக்கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ, ஆளில்லை. இது புனைந்துரையன்று. "தென்மொழி" என்ற சொல்லை என் உணர்வோடு—உயிரோடு கலந்தது. இதனை எப்படி மறக்க இயலும்? 'தமிழே' ,தென்மொழி' 'தென்மொழியே தமிழ்' என்னும் உணர்வே உண்மை நெஞ்சங்களில் படிந்துள்ளது. எனக்கென்னவோ பாவாணர் ஐயா போன்றோர் மறைவு போலவே, தென்மொழி நிற்கும் செய்தியும் என்னை வருத்துகிறது. தென்மொழி நிறுத்தம் குறித்து நினைக்க நெஞ்சு வெடிக்கிறது. எழுதக்கூட கை நடுங்குகிறது. மேலும் நான் எழுதி என்ன செய்யப் போகிறேன்! அழத்தெரியும் அவ்வளவே! இருப்பினும் தமிழ்நிலம் வளர்ச்சி—மீட்சி—ஆட்சி குறித்துச் சிறிது என்னை நானே தேற்றிக் கொள்கிறேன். வளர்க தமிழ்நிலம்! ஆள்க உ.த.மு.க. அன்புநிறை.

புலவர்— மு. ஆறுமுகம், க.மு., சாத்தனூர். வ.ஆ.

22. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்துவிடாதீர்கள்!

அன்பு மதிப்பிற்குரியீர், வணக்கம், தங்கள் சுவடி 19 ஓலை 5-இல் நெஞ்சு நடுக்குறும் செய்தி கண்டேன். எண்ணமழிந்து நிலை தடுமாறினேன். வெண்ணெய் திரண்டு வரும்பொழுது, தாழியை உடைத்துவிடாதீர்கள்! தங்களின் கருத்துக்கு என் பணிவான மறுப்பு இதோ! இருபத்தைந்து ஆண்டுகட்கும் மேலாக வெளிவந்து

கொண்டிருக்கும் 'தென்மொழி'யினுல் தந்நல அறிவாளிகள் உருவாகியிருப்பது உண்மையேயாயினும், அத்தகையவர்கள் மூலமாகத் தற்போதுதான், சித்தேரிப்பட்டு போன்ற உட்சிறு ஊர்களில் எளிய, ஓரளவு படித்த மக்கட்கிடையே தாய்மொழியுணர்வும், அதன் இன்றியமையாமையும் வளமும் பற்றிய விளக்கங்கள் பரவி வருகின்றன. தாங்களே கூறியிருப்பதைப்போல, நாம் எதிர்பார்க்கும் பயன்; ஒருநாளிலோ இருநாளிலோ இருபது, முப்பது ஆண்டுகளிலோ ஏற்பட்டு முடிகின்ற செயலன்று இது. கீதையின் கூற்றுப்படி, பலனை எதிர்பார்க்காமல், அதாவது விரைந்து எதிர்பார்க்காமல் எங்களுக்காகப் பணியாற்றுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். ஓய்ந்திடல் வேண்டாம்; உள்ளம் சலித்திட வேண்டாம். தந்நலக்காரர் வழியாகவேனும் தற்போது சிறுகச் சிறுக, மெல்ல மெல்ல ஏழைப் பொதுமக்களை எட்டிக் கொண்டிருக்கும் இந்நிலையில் அன்புகூர்ந்து தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை நிறுத்த வேண்டாம் என மன்றாடி வேண்டுகிறேன். வணக்கம் அன்பன்,

— வ. மதிவாணன், அறி.இ., (க.மு.), சித்தேரிப்பட்டு-606 206.

23. அதிர்ச்சி அடங்கவே இல்லை!

மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களே! தங்கள்பணிதலுள்ள வீ. வில்வநாதனின் தலைதாழ்த்திய வணக்கம். 1961-இலிருந்து தென்மொழி வாயிலாய்த் தங்கள் அறிவுக் கட்டுரைகளையும் பாக்களையும் படித்தின்புற்று வருகின்றேன். தென்மொழியில் தாங்கள் குறித்தவண்ணம் தனித்தமிழ்ப்பற்றுத் தென்மொழியால் எனக்கு ஏற்பட்டது முற்றிலும் உண்மையே! தாங்கள் குறித்துள்ளதுபோல் தென்மொழியால் பெற்றபயன் அவரவர்களுக்கே பயன்பட்டுள்ளதேயன்றி மற்றவர்கட்குப் பயன்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளீர்கள். தமிழகத்தில் உள்ளவர்களே அப்படி இருக்கின்றார்கள் என்பதில்லை. தமிழகத்தைவிட்டுப் பிறமொழி மாநிலங்களில்கூட இருக்கின்றார்கள்.

குறிப்பாகத் தமிழாசிரியர்களாய்ப் பணியாற்றுபவர்கள் எத்தனைப் பேருக்குத் தனித்தமிழ்ப் பற்றுள்ளது? அவர்கள் எழுதும் அவரவர்களின் படைப்புகளே தனித்தமிழ்ப் பற்றில்லை என்பதற்குக் கரியாகிறது. வாழுதற்குத் தமிழை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றார்களே ஒழிய தமிழுக்கு ஆக்கம் தேடுவதாகத் தெரியவில்லை. தமிழ் எழுத்தில் எழுதிவிட்டால தமிழென்று நினைக்கின்றார்கள். விற்பனை ஒன்றையே கருதி வெளிவரும் கிழமை-திங்கள் இதழ்களைப் பார்த்தாலே உள்ளம் வேகிறது. அவற்றால் பிஞ்சுள்ளங்களில் நஞ்சு ஏறுகிறது. அவற்றைப்பற்றி நினைக்குங்கால் குருதி கொதிக்கிறது.

இவற்றை வெறுத்துத் தேன் தமிழை வளர்க்கப் பாடுபட்டு வரு தென்மொழி, தமிழ்ச்சிட்டு நடத்திவரும் உங்களைப் போற்றாமல் இருப்பது அறியாமையாகும். ஆதலால் புகழ்மாலை உமக்குச் சூட்டு

வதில் பெருமை கொள்ளுகின்றேன். இவ்வாறிருக்க, 'ஓரதிர்ச்சிச் செய்தி தென்மொழியில் காணுங்கள்' எனத் தமிழ்நிலத்தில் இருக்கக் கண்டு, தென்மொழியில் அவ்வதிர்ச்சியைக் கண்டு இன்னும் என்றன் மனத்தில் உள்ள அவ்வதிர்ச்சி அடங்கவே இல்லை. ஐயா! சுருங்கச் சொன்னால் தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிறுத்தப்படுவது மகிழ்ச்சிக்குரியதன்று. எவ்வளவோ மலர்கள் இருக்கின்றன. ஆனால் தாமரைக்கு நிகராகுமா? எவ்வளவோ விண்மீன்கள் உள்ளன. ஆனால் ஒரு திங்களுக்கு நிகராகுமோ? எவ்வளவோ நீர்நிலைகள் உள்ளன. ஆனால் ஒரு கடலுக்கு நிகராகுமோ? இவற்றைப்போலவேதான் எத்தனையோ இதழ்கள் வருகின்றன. ஆனால் தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டிற்கும் நிகராகுமா? ஆகாது; ஆகாது. எனவே அருள் கூர்ந்து இவ்விரு இதழ்களையும் தொடர்ந்து வெளியிடவேண்டுமென வேண்டுகின்றேன். தனித்தமிழ் வளர்க்கும் இதழ்கள் இருப்பதால் தாம் ஒருசில எழுத்தாளர்கள் தங்கள் படைப்பில் ஓரளவாவது தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர்கள். நம்மிதழ்கள் இல்லையெனில் 'மணிப்பிரவாள' நடைக்கு வலிவு ஏற்பட்டுவிடும். தமிழ்ப் பற்றிருந்தாலும் தங்களால் இயலாமையாலும் தங்கள்முயற்சியின்மையாலும், மடியினாலும் பிறசொற்கலப்பு அவர்களுக்குத் தெரியாமல் வந்துவிடுகிறது. தங்கள் உரை தனித்தமிழ்ப்பற்றுளார்க்குத் தேனாகவும் அப்பற்றில்லார்க்கு வேம்பாகவும் உள்ளது. 25-ஆண்டுகளாகத் தமிழ்க் குமுகாயம் மேலோங்கப் பாடுபட்டும் விழிப்புணர்வும் இனவுணர்வும்' தமிழுணர்வும் வளராததைக் கண்டு மனம் நொந்து எழுதிய தங்களின் ஆசிரிய உரையைத் தென்மொழியில் கண்டு கண்ணீர் விட்டேன். தனித்தமிழ்க்குத் 'தென்மொழி'யும் 'தமிழ்ச்சிட்டும்' உள்ளன. குமுகாய முன்னேற்றத்திற்குத் 'தமிழ்நிலம்' வந்துள்ளது. மேன்மேலும் தாங்கள் வெளியிடும் இதழ்களை தொடர்ந்து வெளிவரவேண்டுமேயொழிய வெளியிட்டுவரும் இதழ்களை நிறுத்துவது என்பது எம்மனோரைப் புண்படுத்துவதாய் ஆகும். இதனை இம்மடல்வழி தெரிவிக்கின்றேன். தென்மொழி தமிழ்ச்சிட்டு இவற்றை அருள் கூர்ந்து நிறுத்தாதீர்கள். வாழ்க நும் தமிழ்த்தொண்டு. வாழ்க நும் குமுகாயத் தொண்டு, வாழ்க நும்புகழ்.

அன்புடன், — **வீ. வில்வநாதன்,** தாரவாணிநகர்.

24. மனந்தளராது பணியாற்ற வேண்டுகிறேன்!

பெருமதிப்பிற்கும், பேரன்பிற்குமுரிய பாவலரேறு அவர்கட்கு வணக்கத்துடன் எழுதும் மடல். நலம் நலம்காண பேராவல்.

ஐயா! தங்கள் வாழ்நாள் நெடிது வளர வேண்டுமென்ற விழைவுடையேன். கைமாறு கருதாது தாங்களாற்றிவரும் இனமானம் காக்கும் குமுகாயத் தொண்டு அனைத்து முயற்சியாலும் மேலும் வளர வேண்டுமென்ற பேரவாவுடையேன். இந்நிலையில்

"தென்மொழி" (திசம்பர்-சனவரி 82-83) இதழில் உள்ளத்தளவே வாட்டம் மிகக் கொண்டு, நாடும், மொழியும் பண்டு பெற்றிருந்த பெருமையைப் பெற அல்லும் பகலும் அயராதுழைக்கும் தங்கள் பணி மேலும் சிறக்கத் துணை நில்லாது, தம்முடைய இல்லாத்தாருடைய உயர்வுநலங் காக்கத் தென்மொழியைத் துணையாகக் கொண்டு, தங்கள் உண்மைத் தொண்டுக்கும், எழுச்சிமிகு எண்ணங்களுக்கும் வேர்ப்புழுவாய் அமைந்துவிட்ட, உடன்பிறந்தே கொல்லும் நோயைப் போன்றவர்களுடைய கூற்றுகளையெல்லாம் எடுத்துரைத்துக் கலக்கமுற்ற தங்கள் நெஞ்சக் குமுறல்களைப் படித்துணர்ந்து நானும் நண்பரும் நெஞ்சங்கரைந்து வாடுகிறோம்.

வந்தேறிகளாம் பார்ப்பனர் ஒரு பக்கம் நாங்களும் தன்மதிப்பு இயக்கத்தவர்கள்தாம் என்று கூறிக் கொண்டே நம்மிடையே வீடணர்களாய் மாறிவிட்ட ஆட்சியாளர் ஒருபக்கம் என்ற நிலையில், மனந்தளராது, முன்னிலும் பன்மடங்கு பணியாற்ற வேண்டுகிறேன். அதற்குத் துணையாய் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் தொடர்ந்து வெளியிடப்படவும் வேண்டுமென்று விரும்புகிறேன்.

— வெ. கோ. கன்னியப்பன், அமர்நாத்.

25. தொடரட்டும் தங்கள் திருப்பணி!

தமிழ்நிலத்தின் தண்ணிலவே, வள்ளற்பெருமனம்போல் நல்ல தமிழை நாளும் அள்ளி வழங்கி வரும் தண்முகிலே!

இனிய பணிவார்ந்த வணக்கம். வாழ்க பல்லாண்டு. தங்களது தங்குதடையற்ற, தன்னலங் கருதாத் தொண்டியக்கத்தில் ஏற்படவிருக்கும் மாறுதல்களை அறிகின்ற வழி எளியேன்றன் தமிழ்நெஞ்சம் திடுக்கிட்டது. நீக்கரிதாந் துன்பங்கள் தாக்கிய காலையும் கொண்ட நோக்கில் இறையளவும் வழுவாது இருபத்தைந்தாண்டுகளாக மொழி, இன, நாட்டு நலங்கருதி ஆற்றிய தொண்டு, காட்டிலெறிந்த நிலவாகப் போனதை நெடிதெண்ணி, நெட்டுயிர்த்துத் தீட்டிய ஆசிரியவுரையின் ஒவ்வொரு வரியும் மறுக்கவியலா உண்மை.

தென்மொழியால் பெற்ற நற்றமிழறிவால் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே முன்னேற்றிக் கொள்ளவும், புகழும் பொருளும் பெற்றுச் சாந்துணையும் இன்பந்துய்க்க முயல்வதோடு, தம் பிறங்கடையினர்க்கும் இயன்றளவு முயன்று தொகுத்து வைத்துச் செல்லுதல் கண்கூடு. அறிவாளிகள் என்ப்படுவோர் மேன்மேலும் அறிவாளிகளாகவே அவாவுகின்றனரேயன்றி, மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து உருக்குலைந்து போகும் உண்மை உழைப்பாளர்களை மேனிலைக்குக் கொணர ஒரு சிறிதேனும் ஆர்வமோ, முயற்சியோ கொள்கின்றாரில்லை. உழைப்பவன் நாளுக்குநாள் தாழ்கிறான். உண்டு கொழுப்பவன் உவப்புடன் வாழ்கிறான். இன்றைய நாட்டு நடப்பு, இதுவே; நாடுவதுமதுவே.

இத்தகைய இழிநிலையை எண்ணியெண்ணி மனம் நொந்து, வெந்து, தந்துள்ள கருத்துகள் தங்களது பழுதற்ற பட்டறிவின்

படப்பிடிப்பு; திடமான மனத்துடிப்பு. இக்கேடுகெட்ட குமுகாயப் போக்கிற்கேற்பத் தாங்கள் சற்றே வளைந்து கொடுத்திருப்பீரேயாகில், இன்று திரையுலகிலோ, எழுத்துலகிலோ தாங்கள் ஒரு பெருஞ்செல்வராய்ப் பெயரும் புகழும் பெற்று வாழ்ந்திருக்கலாம். அறிவாளிகள் தங்கள் வளமனை வாயிலில் அங்காந்து காத்துக் கிடக்கலாம். ஆனால் புதிய வரலாறு படைக்கப் புறப்பட்டுவிட்ட தாங்களோ 'ஓடும் செம்பொனும் ஒக்க நோக்கும்' உயரிய உள்ளம் படைத்த கரணியத்தால் உண்மைத் தொண்டிற்கு ஒப்படைத்துக் கொண்டீர்கள். தொண்டின் பயனையுங் கண்டீர்கள் நன்றே.

தங்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், அதேநேரத்தில் எதுவும் தெரியாது. ஏனெனில், இத்தனையாண்டுகளாக என்னனைய அன்பரையெல்லாம் பயிற்றுவித்துவந்த பைந்தமிழ்ப் பல்கலைக் கழகம் திடுமென மூடப்படுமென்ற முடிவு பெரிதும் இனைதற் (வருந்துதற்)குரியதாதாலொடு, தாங்கிக் கொள்ளற்கியலாததுமாம். 'சிட்டு, பறப்பதை நிறுத்திவிடின் பள்ளிப் பறவைகட்குச் சிறகொடிந்தது போலாகாதா? தென்மொழிப் பட்டறை மூடப்படின் ஈடுகட்டவியலா இழப்பன்றோ இக் குமுகாயத்திற்கு? மூட்டைப்பூச்சிக்கஞ்சியா வீட்டைப் பிரிப்பது? நக்கித் திரியும் நாய்களுக்குத் தெரியுமா திருவுருவச்சிலைக்கும். வெறுங்கல்லுக்குமுள்ள வேறுபாடு? தமிழ்நிலமும், உ.த.மு.க இயக்கமும் வலுப்பெற உழைப்போம். தென்மொழி தமிழ்ச்சிட்டு இரண்டும் இலக்கிய வளர்ச்சிக்குரிய மறுமலர்ச்சிக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்பதே எளியேனது விருப்பம்; வேண்டுகோள்.

தங்களது ஆசிரியவுரையினைப் படிக்கப் படிக்க உளந்துடிக்கின்றது. தங்கள்மேற் சினம் பிறக்கின்றது. காய்தலுவத்தலகற்றித் தங்களது முடிவை மறுஆய்வு செய்தருள்க. ஒட்டுண்ணிகளும், புல்லுருவிகளும் தங்களது தனிப்பேராற்றலுக்கு முன் நிற்குமோ? தாழ்நிலையுற்றுவரும் தமிழர்க்காக, தனித்தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்நிலத்திற்காகத் தொடரட்டும் தங்கள் திருப்பணி. இரண்டிதழ்களும் நிறுத்தப்படுமாயின் மொழியின் பெயரால் என்னென்ன கணக்கழிவுகள் நிகழுமோ என்பதை எண்ணுகின்றவழி அச்சம் தோற்றுகிறது. ஓர்க. தென்மொழியைக் கண்ணீராற் காத்தோம்; பிரியத்திருவுளமோ! துன்பமுற வரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை. அன்பிலே, தென்மொழித் தம்பி,

— பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

26. தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் தமிழினத்தின் இரு கண்கள்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களே! வணக்கம். தங்களுடைய அரிய, தன்னலமற்ற, முழுக் குடும்ப ஈகத்தை எண்ணிப் பெருமிதமடைகிறேன். தங்களுக்கும் தங்களோடு தோளொடு தோள் கொடுத்து நிற்கும் குடும்பத்தினருக்கும் நம் அன்பர்களுக்கும் என் நல்வாழ்த்துகள். மனந்தளராது,

யாருக்கு இதுகாறும் தங்கள் தொண்டு கிடைக்கவில்லை என்று தாங்கள் எண்ணினீரோ அவர்களுக்குக் கிடைக்கும்வண்ணம் உழைப்பீராக! கீழ்நிலையில் உள்ளவர்கள் நன்றி மிக்கவர்கள் மட்டு மல்லர்; உழைப்பில் இன்பம் காணுபவர்கள்; நன்மையையும் தங்கள் தன்மையையும் எண்ணிப்பார்க்கும் உண்மை அன்பர்கள்; மெய்ம்மை நண்பர்கள். புரிந்து கொள்ள வைக்கவேணடும். அதில் நானும் ஒருவன். எப்பொழுதுமே தொண்டனாகவே இருக்க விரும்புபவன். தொண்டர்கள் ஏராளம்; தொல்லை இல்லை. தலைவர் ஒருவர்தான். அதற்குத்தானே தொல்லை; போட்டி. தொண்டனாகை—எல்லோருக்கும் அன்பனாக—நண்பனாக இருப்பதே நல்லதெனக் கருதுபவன் நான்.

'தென்மொழியும்' 'தமிழ்ச்சிட்டும்' தமிழினத்தின் இருகண்க ளாக இருக்கும். நீங்கள் 'தமிழ் நிலம்' உ.த.மு.க.வுடன் தென்மொழி தமிழ்ச்சிட்டு இரண்டையும் என்றும் உலவ விடுங்கள். நிறுத்தி விடாதீர்கள். தங்களுடைய தூய உள்ளம், தாய்மை உள்ளம் என்றும் வாழ வேண்டும். பல ஊழிக் காலங்களுக்கு வாழ வேண்டு கிறேன். தங்கள் அன்பன், — மா. இலக்குவன, புதுக்கோட்டை.

27. தென்மொழி அறிக்கை கண்டு புலம்பல்!

என்னருமைத் தமிழ்த்தாயே குழந்தை உள்ள
எண்ணத்தின் ஏக்கமெலாம் வளரத்தானு
தென்னகத்துத் தென்றலர்பா வாணரையே
தெரியாமல் மறைத்தாயோ? கண் முன்னின்று
வன்னெஞ்சர் வாலாட்டம் அடங்காமுன்னர்
வழிகாட்டி வளர்த்தெடுத்த வயங்குதமிழ்
தென்மொழியைத் தமிழ்ச்சிட்டை ஏன்மறைத்தாய்!
தேவமொழி(!) யாடுவதும் நெறியேதானு?

(தென்மொழி அறிக்கை கண்டு புலம்பியது).

— சிவமணி, அமரர் பூண்டி.

28. தாங்கிக் கொள்ள முடியவில்லை!

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். நலம், நலமறிய அவா. சுவடி 19 ஓலை 5-இன் ஆசிரிய உரையைப் படித்துத் துயர் பன்மடங்காயிற்று. தென்மொழியின் ஆசிரிய உரையிற் குறித்திருப்பது முற்றிலும் உண்மையே. தென்மொழியின் பயன் படிப்பாளிகளை மட்டிலும்தான் சென்றடைந் துள்ளது; ஏழை எளிய மக்களைச் சென்றடையவில்லை. பயன் பெற்றோர் அந்தத் திசைக்குச் செல்லவுமில்லை சென்றிருந்தாலும் கொள்வாரில்லை என்பதும் ஓரளவு உண்மை. எப்படித்தான் இந்தச் சாதி, மத, அரசியல் சகதிகளில் சிக்கியிருப்பவர்களையும், பாலுணர் வுகளையே நிலைக்களனாக வைத்து இயற்படும் திரைப்படங்கள்

என்னும் வலையில் விழுந்தவர்களையும் ஈடேற்றுவது? சொன்னால் யார் செவி சாய்க்கின்றார்கள்? பகலெல்லாம் ஒரேபரபரப்பு! பொழுது சாய்ந்தாலோ மதுவெனும் ஆற்றில் நீச்சல் போட்டி! அதன் திறமைத் தேர்வு நடப்பதோ திரைப்பட அரங்குகளில்! பரிசளிப்பு நிகழ்ச்சிகள் அரசியல் மேடைகளில்! பாராட்டுகள் வழங்குவதோ கோவில்களும் பூசாரிகளும்! பெற்ற பெருமைகளையெல்லாம் தந்து ஒப்புமிடங்களாக இருப்பவோ தாய்க்குலச் சமநிலங்கள்! இப்படியிருக்கும் இந்த ஏதுங்கெட்ட தமிழ்க் குமுகாயத்தை எப்படித்தான் அணுகமுடியும்?

நாமெல்லாம் அமைதியாக ஆரவாரமின்றி அதே நேரம் உண்மைகளைப் பேசுகின்றோம். அவை நம் மக்களுக்குப் புரிவதில்லையே! அவர்களின் நாட்டமெல்லாம் வெற்று ஆரவார அரசியலிலல்லவா இருக்கின்றன? எந்த ஒரு புலனமாயினும் பகட்டாகவும், பசப்பாகவும் சொன்னால்தானே ஏற்கின்றார்கள்! பச்சைத் தமிழன் என்பவனே, "தென்மொழியா? இதிலுள்ளது என்ன தமிழா?" என்கின்றான்! எல்லாவற்றிலுமே ஏதோ ஒரு கலப்பை விரும்புகின்ற மனப்போக்குள்ள மக்களிடை நாம் வாழ்கின்றோம். என்னதான் தமிழின, திரவிட இயக்கம் அப்படி இப்படி என்று சொல்லிக் கொண்டாலும், அவர்கள் இன்னும், 'சாதம்' சாப்பிட்டுக் கொண்டும், ஜலமோ, **தீர்த்தமோ**, வாட்டரோ குடித்துக் கொண்டுந் தானிருக்கிறார்கள். படியாதவர்களுக்குத்தான் புரியவில்லை; படித்தவர்களிடம் நம் மொழியினநாட்டு நிலைமைகளைச் சொன்னால், 'இஃதெல்லாம் பித்தலாட்டம். நாம் என்ன அப்படிக் குறைந்துவிட்டோம்?' என்று அறிவற்ற தன்மையராய்ப் பேசுகின்றார்களே! என்னதான் செய்து கொள்வது? யாரைக் குறை சொல்வது? திரவிட இயக்கங்களைச் சேர்ந்த பாதிக்கும் மேற்பட்டவர்களின் நிலைமையும் இதுதான். வளமில்லையாம் நம்மிடம்! வளம் என்று முகாமையாகக் குறிப்பிடப்படுவதெல்லாம் நீர் வளம் ஒன்றைத்தான். நீரே இல்லா அரபுநாடுகள் இன்று செல்வச்செழிப்பில் இருக்கின்றனவே! ஒன்றில்லாவிட்டால் இன்னொன்று இருந்துவிட்டுப் போகின்றது. மேலும், பன்னாட்டு நீரொழுக்குச் சட்டம் எப்பொழுதுமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா? வரும் அளவு நீர் வந்தாக வேண்டும்; இல்லையேல், முன்னணைகள் உடைபட்டாகல் வேண்டும். இதுதானே நடைமுறையாய் இருக்கும். இந்தப் பொதுவான புலனங்கள்கூடத் தெரியா மக்களை என்னதான் செய்வது?

இந்த மக்களிடம் ஏதாவது ஓர் இயக்கத்தின் பெயரில் கைகளிற் கொடிகளுடன் சென்று பேசினால்தான் ஓரளவாவது எட்டிப் பார்த்து ஏனென்று கேட்பர். 'ஏதோ ஒரு புதுக் கட்சிக்காரன் வந்திருக்கின்றான்; நல்லாப் பேசுகிறான்' என்று கூடுவார்கள். அந்த வகையிலே நாமும் ஓர் இயக்கத்தை அமைத்திருக்கின்றோம். நாம்

சிற்றூர்ப்புறங்கட்குச் சென்று மக்களைக் காணவேண்டும். நம் கொள்கைகளை வலிய அவர்களிடம் சொல்லியாகல் வேண்டும்; திரும்பத் திரும்ப எடுத்துச் செல்லா வேண்டியவர்களாக இருக்கின்றோம். **இந்த நிலைகளிலே இரண்டு மூன்று இதழ்களை நடத்துவது கடுமை நிறைந்த வேலைதான். அதற்காகக் கண்மணியாம் தென்மொழியை ஒரேயடியாக நிறுத்திவிடுவதா?** இந்த இதழ்தான் தமிழரிடை ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. தென்மொழியால் விளைந்த பயன்கள் ஏராளம். தாங்கள் பலவகை அகப்புறத் தாக்கங்களுக்கு ஆளாகி இப்படி மனம் நொந்து முடிவெடுத்திருக்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன். தங்களின் உள்ளத்தின் நிலை புரிகின்றது. தங்களின் துயரத்தில் நாங்களும் பங்குகொள்கின்றோம். தாங்கள் தூயதொண்டின் மாமலையாய் நிற்கின்றீர்கள். நானோ தூயதந்நலக்காரனாய் இருக்கின்றேன் என்பதை உணர்கின்றேன். என்நிலை ஒரு தனி வகையாய் இருப்பது ஏனென்று தெரியவில்லை? உலகியலின் ஓட்டத்தில் என் உயிரொத்த ஊர்தி உள்ளியக்கமின்றி என்னை எதிலும் சேரவிடாமல் தடுப்பை ஏற்படுத்தியிருக்கின்றதே! அதன் உள்ளியக்கஞ்சீர்பெறல் வேண்டும்; இல்லையேல், தடுப்பையாகிலும் நீக்க வேண்டும். இரண்டுமில்லா நிலையில் என்ன செய்வேன். தென்மொழியை ஒரேயடியாக நிறுத்திவிடுவது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை; தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை. கிழமை இதழாக எதிர்பார்க்கப்பட்ட தென்மொழி திங்கள் இதழாகக்கூடத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே! ஐயா, இப்படிச் செய்தால், என்ன? தென்மொழியைக் குறைந்தது காலாண்டிதழாக வேனும் வெளியிட இயலாதா? என்னவோ தாங்கள் சொல்லியது போன்று திட்டங்களைச் சொல்லத்தான் தெரிகிறது. செயற்படுத்தவோ அல்லது துணைநிற்கவோ இயலவில்லை. — **கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்**, மின்பாறை.

29. எங்களால் எதைச் செய்துவிட முடியும்?

பேரன்பின் ஐயா அவர்களுக்கு;

'தென்மொழி' நாற்றங்கால் இல்லையெனில் தமிழ்நில விளைவில்லை. ஓரிருவரின் வெற்றுணர்வுகளே துணையாகப் போவதில்லை. தங்களின் பட்டறிவும் உழைப்பும் பலவற்றை உணர்ந்திருக்கும். அதில் எனக்கு ஐயமில்லை. 'தென்மொழியை நிறுத்த வேண்டாம்' என்று என் விருப்பத்தைமட்டுமே வேண்டுகோளாக விடுக்க முடியும். உயர்திரு ……… ……… போல்வர் துணை எத்துணையளவு தென்மொழிக்குக் கிட்டியுள்ளது என்பதைப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. தமிழ்நிலத்தில் முற்றுக அவர் இடம்பெறவில்லை என்பது எனக்கோர் உறுத்தலாகவே இருந்து வருகிறது.

குடும்பவுறுப்பாகவுள்ள ……… போலும் ஒருவர் தென்மொழியைக் கவனித்துக்கொள்வதில் தம்மை முழுமையாக ஒப்புவித்துக்

கொண்டால்—'தமிழ்நிலம்'—உ.த.மு.க. உங்களால் இடையீடின்றி வளர்க்கப்பெறும்.

வயிற்றுக்காக எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு எதையோ செய்துகொண்டிருக்கும் எங்களால் எதைச் செய்துவிட முடியும் என்பதையும் தாங்கள் நன்கறிவீர்கள்.

எஃது எவ்வாறுயினும் தங்களைத் தனிமைப்படுத்தப் புறப்பட்ட தாட்புலி(Paper Tiger)களைப் போலும் "தண்டமிழ்ப் பாவலரேறே, தங்கள் பின்னால் அணிவகுத்து நின்று பிடுங்கிக்குவித்து விடுவோம்" என்று போலியான சொற்களை வீசத் தெரியவில்லை. மாறாத உணர்வு களோடே இருக்க முயல்கிறோம். கடந்தகாலம் இம்முடிவை நோக் கித் தள்ளினாலும், எதிர்காலம் தென்மொழியின் பணி நூற்றாண்டுக் குத் தொடரவேண்டும் என்றே உணர்த்துகிறதென்பதையும் தாங்கள் அறியாமலில்லை. என்றும் தங்கள்,

— **இராவணன்**, பாளையங்கோட்டை.

30. இதழ்களை நிறுத்தும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்!

வணக்கத்திற்குரிய ஐயா அவர்கட்கு,

வணக்கம். நண்பர் அறவாழி, 'தமிழ்நிலம்' இதழை அறிமுகப் படுத்தியதிலிருந்து படித்து வருகின்றேன். தாங்கள் குறிப்பிட்டுள்ள ஏழு துறைகளிலும் நம் தமிழினம் இருக்கும் நிலை, அதற்கு நாம் இனிமேல் ஆற்றவேண்டிய செயல்கள் பற்றி ஒவ்வோர் இதழிலும் அறிந்து வருகின்றேன்.

மணிச் சுருக்கமாக ஒவ்வொரு பத்தியும் அமைந்துள்ளது. அவற்றைப் படிக்குங்கால் நரம்புகளில் குருதி விரைவாகப் பாய் கின்றது. மூளையை உசுப்பிவிட்ட தன்மை உண்டாகின்றது. புத்துணர்வு கிடைக்கின்றது. ஏதாவது உடனடியாகச் செய்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் கிடைக்கின்றது.

எனது அகவை 33. பல ஆண்டுகளாகத் **தமிழ்ச்சிட்டும், தென்மொழியும்** வருவதை இப்போதுதான் அறிகிறேன். பழைய தமிழ்ச்சிட்டு இதழ்கள் சில கிடைத்தன. பெருமூச்சு விடுகின்றேன். இவையெல்லாம், என் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி கால கட்டங்களில் கிடைத்திருந்தால் எத்தகைய உணர்வுகள் கிடைத் திருக்கும்! இப்போதாவது தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியது பற்றிப் பெருமையடைகின்றேன். இந்நிலையில் தென்மொழி, தமிழ்ச் சிட்டு இவற்றைத் தாங்கள் நிறுத்துவதாகக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைகின்றேன். அய்யா, தங்களுக்கு எத்தனையோ நடை முறைச் சிக்கல்கள், காலம் போதாமை இருக்கலாம். நாங்கள்

முடிந்தவரையில் உதவுகிறோம். இக்குழுமாயத்திற்குத் தங்களின் பணி, தலைமை எவ்வளவு தேவையானவை என்பதை அறிகின்றேன். அருள் செய்து இதழ்களை நிறுத்தும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். எங்களை வழிநடத்துங்கள். இங்ஙனம்,

— அ.ப. நடராசன், புக்குளம்.

31. நம் பணி தொடரட்டும் நல்லவர் இணைவார்கள்!

அன்புள்ள ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

என் நெஞ்சத்திலே ஆடுகின்ற செந்தமிழே! உலகம் கயமையின் உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழகம் உணர்வில்லாது மங்கிப் போய்விட்டது. தமிழ் இளைஞர்கள் காம உணர்விலும் கள்-மது-மயக்கத்திலும் மூழ்கிக் கொண்டிருக்கின்றனர். நான் நாள்தோறும் 600 இளைஞர்களைக் கண்டு உசாவும் வாய்ப்புடையவன். தென்மொழியும்—தமிழ்ச்சிட்டும் இவர்கள் அறிந்திலர். தமிழ்நிலம்-என்மூலம் காணுகின்றனர். தனித்தமிழ் உணர்வைவிடப் பொதுமைப் பண்பைவிட பகுத்தறிவுக் கருத்தைவிடப் பாவாடையின் அசைவையும் அர்மண ஆட்டத்தின் அசைவையும் மது மயக்கத்தின் இசைவையுமே அந்தப் பேதைகள் விழைகின்றனர். இந்நிலையில் நாம் உலகத்தோடு ஒட்டவோ அல்லது வெட்டவோ இயலாது என்பது என் சிறிய நினைவுகளில் வாடும் உணர்வு.

அறிவாளிகளை வளர்த்துவிட்ட பணியொன்றே தமிழகத்தை ஆட்டிப்படைக்கும் காலத்தை உருவாக்கும்.

தென்மொழியின் தொண்டு செல்வர்களையோ பணக்காரர்களையோ வளர்த்து விடவில்லை. மனக்காரர்களையும் உணர்வாளர்களையும் உருவாக்கம் செய்துள்ளது. நம் விளைவும் வீழ்ச்சியும் மிகுதியும் குறைவும் ஆகும். விளைச்சலைப் பெருக்கத் தென்மொழி இடையூறாக இருக்காது. சிட்டு பறக்க வேண்டும். காக்கைகளைவிட மயில் குறைவுதான். நிலவைவிட விண்மீன்கள் மிகுதிதான். குறிஞ்சி மலர் எப்போதாவதுதான் பூக்கும்.

இது மலர்க்காடு அன்று பிணக்காடு! இங்கு வாழ்பவர்கள் — மாந்தர்கள் அல்லர்; வல்லூறுகள். தனக்கென வாழ்பவர்கள்! பிறர் நலம் அழித்துத் தான் வாழும் பேதையர். பட்டம் பெறுதல் குழுமாயத்திற்கு என எண்ணுபவர் சிலர். பொருளும் மணமும் பெறவே என எண்ணுவரே இவர்கள்.

தமிழே நம்பணி. தொடரட்டும். நல்லவர் இணைவார்கள். தென்மொழி ஒலிக்கட்டும். தமிழ்ச்சிட்டு பறக்கட்டும்! தாங்கள் என்ன வழியில் தமிழர்களுக்குப் பணியாற்றப் போகிறீர்கள். பாட்டாளி, உழைப்பாளி, தொழிலாளி மக்கள், இம்மண்ணுக்கே உரிய பொதுமை, பகுத்தறிவு, தமிழுணர்வு மிக்க நம்மை அறிந்துகொள்ள ஊர் ஊராகத்

தங்கிக் கொள்கை முழக்கம் செய்யப் போகிறீர்களா? கலை நிகழ்ச்சி நடத்துவீர்களா? இல்லை, உடுக்கெடுத்துப் பாடுவீர்களா? இல்லை, அடுக்கடுக்காய் நடுவண் அரசு, மாநில அரசுக்கெதிராகத் தனியாளாக வேனும் உண்ணாநோன்பு மேற்கொள்வீர்களா? தாங்கள் செய்யும் சிறந்த பணியை இனி யார் செய்வது? அடிக்கடி மக்களுக்கு உணர்வூட்ட என்னவழி சொல்கிறீர்கள். இயலுமா? வேண்டாம் தென்மொழி ஒளிரட்டும். — **பாவலர் கன்னல்**, கரூர்.

32. இருக்கின்ற ஒரே இதழையும் நிறுத்துவதா?

அன்பமை ஐயாவிற்கு,

வணக்கம். சனவரி மாதத்திய 'தென்மொழி'யின் ஆசிரியவுரை கண்டேன். கடந்த ஒன்பதாண்டுக் காலமாய் மாதம் மாதம் தென்மொழி படித்துத் தொய்ந்த உணர்வுகளை மீண்டும் வலிவுபெறச் செய்யும்வண்ணமாய் அமைந்தது தங்களின் ஆசிரியவுரை.......... இல்லை ஐயா, அறவுரை அது. இன்று அதை நிறுத்துவது எனும் முடிவு, என்னைப் போன்றோர் எத்தனைப்பேர்கள், சிற்றூர்ப்புறச் சுழலில் உழல்வோர்கள் 'தென்மொழி' படிப்பதின் மூலம், பகுத்தறிவுள்ளோராய், தனித்தமிழ் விரும்பிகளாய் மாறிவருகின்றனர். வாய்ப்பிருப்பின், உறுதியாகத் தங்களின் பின்னால் நின்று, தனித்தமிழகத்திற்காக என்னையே அழித்துக்கொள்ளவும் அணியமாகவுள்ளேன் என்பதைத் 'தென்மொழி' அன்பர்கள் அனைவரின் குரலாய் ஒலிக்கிறேன். இனி, 'தமிழ்நிலம்' அப்பணியைத் தொடரும் என்பது எங்களுக்குத் தந்த இனிப்பான செய்தி அவர் தம் கருத்துப் பரப்பும் வகையில் எத்தனையோ புதிய இதழ்களை அறிமுகம் செய்யும்போது நமக்கென்று உள்ள நாடறிந்த பாதுகாப்புச் சட்டம் கண்ட 'தென்மொழி'யை நிறுத்துவது நன்றன்று. அப்பெயரே பலருக்குச் சரியான விடை தந்ததன்றோ! இறுதியாய், தாங்கள் அறியாததன்று; இருப்பினும் 'தென்மொழி'யும் தொடரவேண்டும் என்பது என் ஆவல். நிறைவேற்ற வேண்டுகிறேன். அன்புடன்,

— **வெ. மகராசன்**, வளையப்பட்டி

33. நேரில்லா நெஞ்சம் அதிர்ந்தது

தன்னலமில்லாத் தமிழ்நிலத் தலைவா!
தமிழ்க்கொரு மணியாய்த் தழைத்தநல் உயிரே!
பாவலர் ஏறெனும் பைந்தமிழ் **அணியே!**

வணக்கம். தென்மொழி—சுவடி 19, ஓலை 5-இல் தங்கள் உரையைக் கண்டேன். உங்கள்மேல் எனக்கு ஏற்பட்டது கடும் சினமே. தந்தையின்மேல் மகன் காட்டும் உரிமைச் சொல் வீச்சாக இந்த மடலைக் கருதிக் கொள்ளுங்கள்.

ஆறு பெருகிவருகிறது, கழனிகளை விளைவிக்கிறது, தோப்பு தழைக்க வைக்கிறது; குளங்கள் நிரம்புகின்றன; குட்டைகளுக்கும் வாழ்வு வந்துவிடுகிறது. ஆனால் கோடியில் உள்ள மேட்டாங் காட்டுக்கு எட்டவில்லையே! ஏன்?

இடையில் ஏற்பட்ட தடைகள் தாமே! இந்தத் தடைகளின் மேல் சினந்து ஆறு தன் போக்கைச் சுருக்கிக் கொள்ளலாமா? கூடாது...கூடாது...கூடவே கூடாது. தடைகளை உடைத்தெறிய வேண்டுமெனின் ஆறு காட்டாறாக வேண்டுமெனின் மாறலாம். அதற்காக 'ஓட்டத்தை நிறுத்துவேன்' என்று உரைப்பது?

அறிவாளிகள் பெருகட்டும். அவர்களிடையே உள்ள குறைகளை மாற்ற முனைவோம். அதற்காக வளரும் தலைமுறைக்கு அறிவூட்ட மறுப்பேன் என்று தாங்கள் கூறமுனைவது எங்ஙனம் நயன்மை ஆகும்? தென்மொழிப் பட்டறையை மூடக்கூடாது. நம் படைப்புகள் பெரும்பான்மையான மக்களிடம் போய்ச்சேரவில்லை; போய்ச்சேர்ந்த இ த்தில் விளைந்த அறிவாளிகள் மக்களிடம் போகவில்லை. என்ன காரணியம்?

மக்களை ஒதுக்கிவிட்டு எந்த அறிவாளியும் எந்தப் பாவலனும் எந்த எழுத்தாளனும், உயிர்ப்போடு இயங்கமுடியாது. படையணியில் காப்பணி, பொருதணி, துணையணி எனப் பலவகையுண்டன்றோ! பொருதுதற்கான அணியை அணியம் செய்யாமலே இதுவரை இருந்துவிட்டோம். மக்கள் சிக்கல்களை மக்களோடு மக்களாக நேரில் காணக் காலம் தாழ்த்தி விட்டோம்.

ஒரு பொதுவுடைமைத் தோழர் என்னைக் கேட்டார் (இடப்: திண்டுக்கல், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய பாட்டரங்கில்) மொழித் தூய்மைக்காக மட்டுமே இதுவரை நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்களே அன்றி, வேறு எவ்வெவற்றிற்காக வீதிக்கு வந்திருக்கிறீர்கள்? தொழிலாளர் சிக்கல், வேளாண்மைப் போராட்டங்கள், அரசு ஊழியர் வேலைநீக்கம், ஆலைப் போராட்டம், விலைவாசிப் போராட்டம், போன்ற சிக்கல்களுக்காக அனைத்துத் தொழிற்சங்கங்களும் போராடிய காலத்து, நீங்கள் வீதிக்கு வந்து குரல் கொடுத்ததுண்டா? மக்களுக்காக வேலை இழப்பு, சிறைத் தண்டம் இப்படிப் பற்பல ஈகங்களை(தியாகங்களை)ப் புரிந்த எம்மவர் முன் வெறும் மொழிப் போராட்டத்துக்காக மட்டுமே முன்னிற்கும் நீங்கள் எங்ஙனம் மக்களை மதிப்பவர்கள் ஆவீர்கள்? நான் உ.த.மு.க. அதற்காகத்தான் பிறந்துள்ளது தோழரே-இனிப் பாருங்கள் எங்கள் இயக்கத்தை என்றேன்.

எந்தப்பொழுதிலும் உணர்ச்சி வயப்படாமல் விழிப்போடு பேசும் எங்கள் ஐயா, இப்படி எழுதியிருக்கவே கூடாது. எங்கேயோ

உள்ள சினத்தைச் சேய்கள் மேல் காட்டும் தந்தையைப் போல நீங்களும் சினந்து விட்டீர்கள்.

இற்றைப நாளில் .... கலைகெட்டுத் திரைகெட்டு இதழ்கெட்டு எல்லாமே கெட்டு ஆடையிலாப் படங்கள் அருவருப்புக் கதைகள் பெருகி, மதவெறியர்களும், சாதி வெறியர்களும் அரசியல் பதவி வெறியர்களும் காட்டாட்டம் போடுகிற வேளையில், நச்சுப்புகை சூழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், மொழிச்செப்பம், அறிவுச் செப்பம், பண்பாட்டுச் செப்பம் செய்பவந்த இளந்தென்றற் காற்றின் மூச்சையே இறுகப்பிடிக்கப் பார்க்கிறீர்களே! இது சரியா? இது தகுமா? இது முறையா?

நாடு, மொழி, இனம், பண்பாட்டு நலன்களை அழிக்கப் புறப் பட்டிருக்கும் மணியன்களுக்கும், மடயர்களுக்கும், தங்கள் 'தென் மொழி மூடுவிழா' இனிப்பாக அன்றோ இருக்கும். வழிகாட்டி மரங் கள் சாயக்கூடாது; வளமிகு ஆறு நிற்கக் கூடாது; கொடியடுக்கிய கோடித் தமிழ் உள்ளங்களின் சார்பில் கனிந்து வேண்டுகிறேன்... தென்மொழிப் பட்டறை திறந்தே ஆகவேண்டும். அஃது இன்னும் பல படைக்கலன்களை வடித்தளிக்க வேண்டியிருக்கிறது.

நம் பணி இன்னும் முடுக்கம் ஆகட்டும். மக்களிடம் செல்வோம்; குறைகளை அகற்றும் கொள்கையராகச் செல்வோம். தோளோடு தோள் உயர்த்துவோம்; துயர் களைவோம்.

தென்மொழியால் பயன்பெற்றோர், பயன்பெறுவோர் ஏராளம்... ஏராளம் வித்தூன்றி விட்ட வேளாளர்! விளைகின்ற நேரத்தே சினம் வேண்டாம்.

'காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்' என்ற தமிழ்மறை தங்களுக்குத் தெரியாததா?

கடல்நடுவே மதவெறி, இனவெறி, பதவிவெறி, சாதிவெறி என்ற கடும் புயல்களின் தாக்குதல் நடக்கும் நேரத்தில், எங்கள் காலத்தின் காவலன், தமிழ்நிலத்தின் நாயகன் தவிக்கவிட்டுவிட்டுச் செல்வதை நான் ஏற்கமாட்டேன். கரைசேர்க்க மறுக்காதீர்கள் என வேண்டும். அன்பு, — **தமிழ்ச்சுடர் மணிமுத்து**, பழனி.

34. தமிழ்நில விளைவுக்குத் தென்மொழியே நாற்றங்கால்!

அன்புகெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கத்துடன் எழுதும் மடல். தங்கள் தலைமையுரை கண்டேன். உங்கள் தலைமை யுரை மிகவும் தெளிவாக இருந்தது. **தென்மொழிக்கு** மூடுவிழா வும், **தமிழ்ச்சிட்டுக்குச்** சிறகொடிப்பும் வரும் — என நொந்து எழுதியுள்ளீர்கள். அக் கொடிய சொற்கள் எம் நெஞ்சில் குண்டு

துளைப்பது போல் ஆயின. அதைப்பற்றி எளியவன் கருத்துகளையும் சற்று உன்னிப் பார்க்குமாறு மிகத்தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்த உழைப்பு வெறும் அறிவாளிகளையே உருவாக்கியது; அதனால் ஏழை, நாலாம், ஐந்தாம் தர மக்கள் பயன்பெறவில்லையேஎன எண்ணும் நீங்கள், இன்னும் இருபத்தைந்து ஆண்டு சென்றபின்—நாம் சொல்வதை, எண்ணுவதை இந்த நாலாம், ஐந்தாம்தர மக்கள் கேட்கவில்லையே என வருந்த வேண்டிய சூழ்நிலையைத் தேடிக் கொள்ளாதீர்கள்.

நீங்கள் மக்களிடம் சொல்லப்போவதென்ன? அவர்களிடம் எந்தவகை உணர்வைத் தூண்டப்போகின்றீர்கள்? உங்களின் உணர்வையும், உங்கள் செயலையும் அவர்கள் எண்ணும்படி சூழ்நிலையை வளர்க்கப்போகின்றீர்களா? அன்றி நீங்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தரப்போகின்றீர்களா? அல்லது நாடு, மொழி, இன உணர்வைக் கொளுத்தப் போகின்றீர்களா? ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வோர் ஆளையும் சந்திக்கப் போகின்றீர்களா? எப்படி எந்தவகையில் மக்களைச் சந்திக்கப்போகின்றீர்கள்? நீங்கள் எந்த வகையாலும், எப்படி வளைந்தாலும் அவர்களின் சூழ்நிலை, வாழ்நிலையை முற்றிலும் மாற்றுவது தாங்கள் எண்ணுவதுபோல எளிதாக நடக்கக் கூடிய செயலன்று.

வள்ளலார் இராமலிங்கனார் 'உணவைப் படைத்துக் கொடுத்து விட்டால் பசிக் கொடுமையே தீர்ந்து போகும்'- என மாற்றுவழி செய்தார்களே அதனால் என்ன பயன் விளைந்தது? அந்த ஏழைகளின் பசி—பட்டினி—அடியோடு மாறிப்போய்விட்டதா? அறிவுச் சுரங்கம் மூலம் ஊற்றெடுத்து அவர்களின் நெஞ்சிலே சுரந்ததா? இல்லையே! ... அந்த நாலாந்தர மக்கள் அப்படித்தான் இருக்கின்றனர். அதைப் போன்றதுதான் தங்கள் நிலையும் நினைப்பும்!

ஏழ்மையை இன்று காட்டுவது 'கலை' யென்றும், பாட்டென்றும் பிதற்றிக்கொள்பவர்களின்—முகத்திரையைக் கிழித்து, முழு உருவமாய் நிற்கவைத்தலும், ஊர்முழுக்க மேளம் கொட்டினாலும் இம் மக்களின் செவிகளில் இவை ஏறா. ஆரவாரமாய் ஆர்ப்பரிக்கும், அரசியல் கொலைஞர்களாலும், ஆர்வமாய் உணர்ச்சி கொட்டி நடிக்கும் நடிகர் கொலைஞர்களாலும், கண்களைத் தோண்டி அவர்களின் காலடியில் படையல் செலுத்தும் இம் மக்களை உங்கள் உரையோ, கருத்தோ, சற்றும் தட்டியெழுப்பா. கடந்த சில ஆண்டுகளாய் எத்தனையோ கட்டுரைகள் எழுதியுள்ளீர்கள் இதைப்பற்றி.

நீங்கள்....தென்மொழி நாற்றங்காலிலிருந்து பிடுங்கி நடப்பட்ட பயிர்கள்தாம் உ.த.மு.க. என்றீர்கள்?

இன்றோ தென்மொழி வெறும் அறிஞர்களையே உருவாக்கியது, அறிவுப்பெருக்கம்தான் அவர்களுக்கு வேலை, மக்களைப் பற்றியும்

நாட்டைப் பற்றியும் நினைக்கவேயில்லை என்கிறீர்கள்? உ.த.மு.க.—தென்மொழியியக்கத்திலிருந்து பிறந்தது என்கிறீர்கள். ஆனாலந்தத் தென்மொழிப் பட்டறையை மூடிவிட்டால் ஏழை மக்கள் திரண்டு நாட்டைப் பிடித்து, நாலாம் ஐந்தாம்தர மக்கள் விழிப்படைந்து விடுவார்கள் என்று சொல்வது போல் கூறுகின்றீர்களே ஏன், ஏன் இந்த ஏமாற்றம்?

அடிமை மக்கள் பாழ்பட்டும், கீழ்மைப்பட்டும் கிடப்பதற்குக் காரணியம் என்ன? அதற்காக நேரடியாகத் தாங்கள் இறங்கிச் செய்யப் போகின்ற செயல்தான் என்ன? எதுவும் புரியவில்லை!

அறிவுத் தெளிவு உள்ளவனே சிந்திக்கின்றான். சிந்தனை ஓட்டம் அவனின் செயல் திறனாக விளைகின்றது. ஆகவே அறிஞர் களை நீக்கிவிட்டுச் செயல்படுவது வெற்றிபெற முடியாது. இன்று தமிழக ஏழைமக்களை வறுமைப்பிணி மட்டும் ஆட்டிப்படைக்க வில்லை. குறிப்பாக அவர்கள் தான்தோன்றித்தனமாகவும், கட்சி, குல, மத, சாதி, வேறுபாட்டால் சிதைவுண்டு உண்மையை மறந்தும் ஓடுகின்றனர். அவர்களிடம் உங்கள் சொல்லெல்லாம் கொஞ்சமும் எடுபடாது. மது அரக்கனின் அடிமையாகவும், உணர்ச்சிக்கு அடிமையாகவும் திரைப்பட அணங்குக்குப் பித்தாகவும் இருக்கின்ற மக்கள் யார்? அவர்களிடம் உங்கள் செயல் 'ஒரு கட்சியின்' செயலே என்று சொல்லி அப்படியே விட்டு விடுவார்கள்.

முதலில் தமிழக விடுதலை மாநாடு நடத்திப் போராட்டம் தொடங்கினீர்கள்! தாங்கள் சிறைப்பட்டதுதான் மிச்சம்! எளிய மக்களிடம் அச் செயல் வெளிப்படுத்தப்பட்டதா? நம் நாட்டிற்கு இப்படிப்பட்ட தலைவரும் இருக்கின்றாரா என யாராவது எண்ணு கின்றார்களா?

உங்கள் சிந்தனை, பின்னை விளைவதை முன்கூட்டியே கணித்துச் செயல்பட்டால் மிக நன்று. ஏழை எளிய மக்களின் சிந்தனை இன்று பெரிதும் உறிஞ்சப்படுவது அரசியல் தலைவர்களால்தான்! இன்றைய தமிழக மக்களுக்குத் தேவை அரசியல் சிந்தனையே! தாங்கள் அதைத் தெளிவுபடுத்தப் பாடுபட வேண்டும். தென்மொழி உண்மையிலேயே ஒரு நாற்றங்கால்தான்! தமிழ்ச்சிட்டு விதைக்க தகுந்த நிலம்தான்! மாணவர்களின் உள்ளத்தை வெளிப்படுத்தி விதைவிட்டுத் தென்மொழியால் நாற்றங்கால் பயிரினால் கண்டிப்பாக அவன் பதராகப் போவதேயில்லை! அப்படி விளைந்தவர்கள் தாம் நாங்கள்! எங்களில் சிலர் பதரானால் அதற்குக் காரணம் நீங்கள் இல்லை, அவனின் சூழ்நிலையே! பதரைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எங்களின் தமிழின உணர்வு முற்றிப் பயிரின் அறுவடைக் காலத்தை நெருங்க வைப்பதே-'தமிழ்நிலம்' மீட்பதே வேலையாகும். ஆதலின் அதற்காக எதையோ எண்ணி, எப்படியோ

முடிக்காமல் **தென்மொழி** நாற்றங்காலே மறுபடி மறுபடி விதைக்க, விதைக்க, உழவு வேளாண்மையால் 'தமிழ்நிலம்' குறிக்கோளாகக் கொண்டு தென்மொழி இதழைக் கருவியாகப் பயன்படுத்திச் செயலாக்குங்கள். இவண், சி. **வெற்றிவேந்தன்**, கரைமேடு.

35. சிறந்த தொண்டாற்றிய இதழை நிறுத்துவதா?

மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம். இம் மடல் நான் தங்கட்கு வரைகின்ற முதல் மடலாகும். 'தென்மொழி' யை நீங்கள் நிறுத்தப்போவதை அறிந்து அதை நிறுத்த வேண்டா வென்று வேண்டுகோள் விடுத்து வரையப்பெற்ற மடல்களை யானும் பார்த்தேன். என்னுடைய வேண்டுகோளும் அதுவே ஆகும். நானும் தென்மொழியின்பால் மிகுந்த பற்றுக் கொண்டவர்களுள் ஒருத்தியே ஆம். தென்மொழியின் முழுப்பயனையும் உலகியலறிவு இல்லாத காரணியத்தால் உணரமுடியாத நான், இத்திங்கள் தென்மொழியில் வெளிவந்துள்ள மடல்களை அறிந்தபின்னரே மிக வருந்தினேன். இந்நிலைச் சிறந்த தொண்டாற்றிய ஓர் ஏட்டை நிறுத்தல்வேண்டாம் என யானும் வேண்டிநிற்கிறேன்.

— **அரு. அழகம்மை** (இன்னரசி), தேவக்கோட்டை

36. தங்கள் உழைப்பு ஒருபோதும் வீணாகாது!

அன்பார்ந்த அய்யா அவர்கட்கு, வணக்கம். தாங்கள் 'தென்மொழி' ஆசிரிய உரையில் எழுதியிருந்ததைக் கண்ணுற்றேன் மனம் கலங்கினேன். இளஅகவையிலிருந்தே தமிழார்வம் கொண்டு, கடந்த ஆண்டு முதல் 'தென்மொழி'யை அஞ்சல் மூலம் பயின்று வருகிறேன். கடந்த அக்டோபர்த் திங்களில் தாங்கள் பெண்ணாகடம் வந்தபோது தங்களோடு அளவளாவி மகிழ்ந்தேன். அன்றிலிருந்து 'மெல்லத் தமிழினிச்சாகும்' என்ற நிலைமாறி 'மெல்லத் தமிழ் இனி வளரும், வாழும்' என எண்ணிய எனக்குத் தங்களின் முடிவு பேரதிர்ச்சி அளிக்கிறது. தங்களின் உழைப்பு ஒருநாளும் வீணாகாது. எனவே தாங்கள் தென்மொழி இதழினை நிறுத்துவதென்ற நிலையினை மறுஆய்வு செய்ய மனம் நெகிழ்ந்து மன்றாடுகிறேன்.

— சி. **திருவாணன்**, இறையூர் பெண்ணாடம்.

'தமிழ் நிலம்'

கிழமை இதழ்—சென்னை-5.

1.	தனியிதழ்	விலை உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18. 00

ஒரிதழுக்கு உரு. 4.00 மேனி முன் பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ் நிலம், 5, அருணாசலத்தெரு, சென்னை-5.

16-ஆம் பக்கத் தொடர்ச்சி

அப்படிச் சொல்லாதேடா. பருவம் அடைந்த பெண் அதுவும் மூக்கும் முழியுமாக அழகா இருக்கு உன் அம்மா இருந்தால் கவலே இல்லே. ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிட்டால் அதை நினேத்தாலே வயிற்றில் புளியைக் கரைத்ததுபோல் இருக்கிறது.

'சரி கருப்பா! நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கண்ணன் கிளம்பினன்.

'சரி சாமி,நான் இன்று கண் பண்டுவக் குழுவில் சேராவிட்டால் வீட்டுக்கு வருகிறேன்; பெரியசாமியிடம் சொல்லுங்கள்'.

'ஆகட்டும் அப்பாவிடம் சொல்லிவிடுகிறேன். நான் இன்றே நம் ஊருக்குத் திரும்பிவிடுவேன்'.

சிவகங்கையிலிருந்து சாலேக்கிராமம் செல்லும் கடைசிவண்டி கிளம்பியது. அதில் முத்து ஊருக்குத் திரும்பாததைக் கண்ட கண்ணன் கொடிய திட்டத்துடன் வந்து கொண்டிருந்தான்.

$10\frac{1}{2}$ மணிபளவில் வண்டி சாலேக்கிராமம் வந்தது மின்சாரம் இல்லாததால் எங்கும் ஒரே இருட்டு. மழைவேறு தூறிக்கொண் டிருந்தது. வண்டியில் இருந்து இறங்கிய கண்ணன் சேரியை நோக்கி நடந்தான். சிற்றூர்ப்புறங்களில் எட்டு, எட்டரை மணிக்கே உறங்கத் தொடங்கிவிடுவார்கள். மழைவேறு தூறிக் கொண்டிருந்ததால் எல்லோரும் கதவை அடைத்துக் கொண்டு உறங்கினர். கண்ணன் பதுங்கிப் பதுங்கி முத்துவின் வீட்டை அடைந்தான்.

முத்து எப்படியும் கடைசி வண்டியில் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் அடுத்த வீட்டிற்குக்கூட படுக்கச் செல்லாமல் செல்வி மட்டும் கதவை அடைத்துக்கொண்டு படுத்திருந்தாள். நல்ல தூக்கம்.

கதவு பூட்டியிருந்தாலும் குடிசைதானே. நிலேக்குமேல் இடை வெளி பெரிதாத இருந்தது. கண்ணன் பூனேபோல் ஏறி மெதுவாக இறங்கினன். முதல் வேலேயாக செல்வியின் வாயைக்கட்டி கத்த விடாமல் செய்தான். அவளுக்கு விழிப்பு வந்து தன்னிலே அடையும் முன்பே கண்ணன் முந்திக்கொண்டு விட்டான்.

அடுத்த சிறிது நேரத்தில் கதவு தட்டும் ஒலிகேட்டது. உள்ளே 'ஏதோ' நடக்கிறது என்று எண்ணிய முத்து மூங்கில் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து கைவிளக்கை எடுத்துப் பார்த் தான். ஒருவன் கொல்லேப்புறம் ஓடினன். நிகழ்ந்ததை ஓரளவு உணர்ந்துகொண்டு அவனேப் பின் தொடர்ந்தான்.

மூலே முடுக்குகளெல்லாம் புகுந்து ஓடிய கண்ணன் ஓரிடத்தில் வழுக்கி விழுந்தான். பக்கத்தில் கிடந்த கல்லில் தலே மோதியது. குருதி பெருக்கெடுத்தது. அவனே விரட்டிச் சென்ற முத்து கை

விளக்கை அடித்துப்பார்த்தான். கண்ணன் குருதி வெள்ளத்தில் கிடந்தான். எண்ணிப்பார்க்க நேரமில்லை. அப்படியே தோளில் தூக்கிக் கொண்டு நாட்டுமருத்துவர் வீடு சென்றான். அவர் முதல் உதவி செய்தார். உடனே ஒரு மாட்டுவண்டியில் இளையான்குடி கொண்டுவந்து வாடகை உந்தில் சிவகங்கை கொண்டுவந்து மருத்துவமனையில் சேர்த்தான்.

கண்ணனைக் கவனித்த மருத்துவர் 'குருதி நிரம்ப வெளியேறி விட்டது. இவரது குருதி 'பி' பிரிவைச் சேர்ந்தது. அப்பிரிவு இருப்பில் இல்லை. மதுரையிலிருந்து வரவழைத்துத்தான் செலுத்த வேண்டும். அதுவரையில் ஒன்றும் சொல்வதற்கில்லை. என்று கூறிவிட்டார்.

உடனே முத்து என் குருதி 'பி' பிரிவைச் சேர்ந்ததுதான். என் குருதியை எடுத்துச் செலுத்துங்கள் என்றான். முத்துவின் குருதி கண்ணனுக்குச் செலுத்தப்பட்டது.

தந்தையைக் காணச் சென்ற மூத்து தான் அவரை முதல்நாள் கண் மருத்துவத் தங்கலில் சேர்த்துவிட்டுப் போகும் போது கடைசி வண்டி சென்றுவிட்டதையும் அதன்பின் இராசசிங்கமங்களம் செல்லும் சரக்கு வண்டியில் ஊர் சென்றதையும் சொல்லித் தங்கைக்கு நேர்ந்த கொடுமையைக் கூறினால் கண் அறுவைமருத்துவம்செய்யப்பட இருக்கும் அவர் மனம் கலங்குவார் என்று கருதி அதைச் சொல்லாமல் கண்ணனுக்கு நேர்ந்ததைக் கூறி, தான் மீண்டும் மாலையே ஊர் திரும்புவதைப் பட்டும்படாமலும் கூறிவிட்டு வந்தான். வண்டி புறப்பட நேரம் இருந்ததால் கண்ணனை மீண்டும் பார்ப்பதா வேண்டாமா என்று எண்ணியவனாய் நடந்தான். கால்கள் மருத்துவமனைக்கு இட்டுச் சென்றன.

கண்ணனுக்கு உணர்வு திரும்பியிருந்தது. அவன் அப்பாவும் அம்மாவும் அருகில் இருந்தனர். முத்து உள்ளேசென்றதும் கண்ணன் எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை. அவன் கண்கள் நன்றிப் பெருக்கால் நீர் நிரம்பியிருந்தது. 'முத்து! எனக்கு வழுக்கி விழுந்தது தான் தெரியும். அதன்பின் எதுவும் தெரியாது. நடந்ததை எல்லாம் அறிந்தேன். நீ மலையளவு உயர்ந்துவிட்டாய். உன்முன் நான் ஒரு சிறிய புழு......' என்று சொல்லிக்கொண்டே போனான். முத்து மரம்போலுணர்ச்சியற்று நின்றான். அவன் கையைப் பிடித்து கண்களில் ஒற்றிக்கொண்டு கண்ணன் தொடர்ந்தான். 'முத்து! நான் செய்த தவறுக்குக் கழுவாயாகத் தமிழக அரசின் தங்கப்பதக்கத்தை வாங்க முடிவு செய்துவிட்டேனடா மச்சான்' என்றான்.

அப்போது ஓராள் வெயர்க்க விருவிருக்க உள்ளே நுழைந்தான்— முத்துவின் தங்கை செல்வி தனக்கு நேர்ந்த இழிவைப் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டாள் என்ற செய்தியைக் கூறினான்.

O

பேசும் வேடிக்கை மாந்தர்களாக, நன்கு உண்பதும், உறங்குவதும், இனப்பெருக்கம் செய்வதும் மட்டுமே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இருக்கலாம். இருந்தாலும், சிலராவது இனம், மொழி, நாடு இவற்றின் மேம்பாட்டை நாடுகின்ற, மேம்பாட்டிற்காக உழைக்கின்ற நோக்கம் உடையவர்களாக இருப்பார்கள் என்பது உறுதி. எனவே, அவர்களின் உதவியைப் பெறுவதில் தவறில்லையே. அதே தென்மொழி மூலம் ஒரு வேண்டுகோள் விடலாமே. 'அவரவரால் முடிந்த ஆதரவை நல்குவீர்' எனச் சிலர் கேளாமலே குறிப்பறிந்து உதவுவர். பலர் வேண்டுகோளின் பேரில் உதவுவர். மிகப்பலர் வேண்டியும் உதவார். அவர்கள் பற்றி நமக்குக் கவலை இல்லை.

ஓர் இன மேம்பாட்டிற்காக, உழைக்கக் கூடிய இயக்கத்தின் முரசாக இருக்கின்ற இதழுக்காக, ஈக உணர்வுடையோரிடம் வேண்டுவது எவ்வகையில் தவறுகும்? தன்னலத்தின் மொத்த வடிவமாக விளங்குகின்ற இவ்வினத்தை என்னதான் செய்வது? காலம் கனியும்வரை ஏதாவது வினை செய்துதானே ஆகவேண்டும்? அவ்வினையாற்றலுக்கு முகாமையாக விளங்குவது இதழல்லவா? அடிமேல் அடி அடித்துத்தான் நகர்த்த வேண்டியுள்ளது. மற்ற இனத்தாரின் உணர்வும், வினைப்பாடும், எழுச்சியும் கண்டபின்னுவது, இந்த உணவுப் பிண்டங்களுக்கு உணர்வு வருகிறதா? அதை வலிந்தல்லவா திணிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு திணிக்க முகாமையாக விளங்குவது தென்மொழியல்லவா? இந்த முகாமையான காலகட்டத்தில் இதை மூடிவிடுவது முறையான செயல்தாமா? பஞ்சாபிலே ஓர் இலக்கம் பேர் உயிரை ஈகம் செய்ய முன்வர வேண்டியுள்ளனர். ஆனால் இங்குச் சில ஆயிரம்பேர்களாவது சிறு பொருள்தர முன்வரமாட்டார்களா? தமிழகத்தில் தமிழ் மக்களால் ஆக்கப்பட்ட செல்வத்தை, இங்குள்ள செல்வர்கள் பார்ப்பனீயமாகிய நச்சுச் செடிவளர எருவாகவும், நீராகவும் பயன்படுத்தி வருகின்றனர். இதை எங்கே சென்று யாரிடம் சொல்லி அழுவது? இதை வேரறுக்க வேண்டாமா? "செய்தக்க செய்யாமையானும் கெடும்" என்பது வள்ளுவரின் கூற்றல்லவா? இங்குள்ள இரு முகாமையான கட்சிகளும் தமிழ்நாடு, இன, மொழி நலன்களையெல்லாம் காற்றில் விட்டுவிட்டு, யார், யாரை அழிப்பது என்பதில் காலமெல்லாம் கழிகிறது. இதைப் பகைவர்கள் எவ்வாறு தமது வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று பேயாய் அலைகின்றனர். இவற்றை நமது அணியில் இருப்பவர்களுக்காவது அறிவிக்கவேண்டாமா? மேலும் அணியை உயர்த்த இதழ்களின் எண்ணிக்கை பெருகல் தேவை. அவ்வாறுன நிலையில் இருப்பதையும் மூடலாமா? அன்பன், புலவர். அறிவுடை நம்பி.

குளத்துப்பாளையம்.

0 : 972: பேரன்பினிய பாவலரேறு ஐயா அவர்கட்கு பணிவான வணக்கங்கள். பல்லாண்டு வாழ்க எனும் பைந்தமிழ் வாழ்த்துகள். 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' எந்தக் கரணியத்திற்காகவும் நில்லாமல் தொடர்ந்து இசை பாடட்டும். தென்மொழியை நிறுத்துவது என்பது உயிர் இயங்காமல் நிறுத்திக்கொள்வதற்கு ஒக்கும். தென்மொழியின் வினைத்திறம் வானினும் உயர்ந்தது; தென்மொழியால் கிட்டிய பயன் கடலினும் பரந்தது, ஆழ்ந்தது. தென்மொழியால் இனிப் பெறவிருக்கும் விளைவுகள் பனிமலையினும் பெரிதாயுள்ளது.

'தென்மொழியை', கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச்
சாகும்வரை
தேர்ந்தஉயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன்—வாழ்வு
தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றிவருவேன்!

— கனிச்சாறு முதல்தொகுதி

அம்மம்ம! எப்படிப்பட்ட கற்கண்டுச் சொற்களால் தனித்தமிழ்ப் பட்டையத்தில் உறுதிமொழி தந்துள்ளீர்கள். மறந்துவிட்டீர்களா? தென்மொழியை நிறுத்தும் துணிவு எப்படி வந்தது உங்கட்கு. சென்னையில் தங்கள் இல்லத்தில் தங்களிடம் நேரில் கூறியதுபோல் தென்மொழியை நீங்கள் நிறுத்த முனைந்தாலும் தங்களை எளிதில் விடோம். ஆகவே மறுஆய்வு என்னும் சொல்லுக்கு இடமின்றித் தொடர்ந்தாற்போல் தென்மொழி உலாவரட்டும். இந்தச் செய்திகளையே நிரப்பிக்கொண்டு தென்மொழி நடையிட வேண்டாம். முன்னுள்போலே இந்நாளும் எந்நாளும் இலக்கியப்பணிக்கே முழுதும் நடைபோடட்டும் என்று அன்புடனும் ஆர்வத்துடனும், உணர்வுடனும் உரிமையுடனும் வேண்டிக்கொள்கின்றேன். வாழ்க. நன்றி. தென்மொழி தொடர்ந்து நன்மொழி தருமாக. அன்பினன் தென்மொழித் தொண்டன் —புலவர். நாவை.சிவம், இல.இ;கல்இ. மணப்பாறை.

0 : 973: பேரன்பிற்குரிய ஐயா, தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் தொடர்ந்து வெளியிடத் தாங்கள் முடிவெடுப்பதே எங்களுக்கு மனநிறைவினைத்தரும். 'தென்மொழி' என்னும் ஓர் இதழ் தொடங்கப்பெறவில்லையெனில் 'தனித்தமிழ்' எனும் 'மொழிக்காப்பு" இயக்கம் மண்ணோடு மண்ணாபிருக்கும். செந்தமிழ் ஞாயிறு தேவநேயப்பாவாணரின் ஆற்றல் தமிழுக்கு இந்த அளவிற்குப் பயன்பெற்றிருக்காது. அரசே 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'க்கு என ஒரு துறையினையும் உருவாக்கி இருக்காது. தமிழ்ப்பகைவர்கள் புதுப்பா என்றும் புதிய எண்ணம் என்றும் மொழிக்கொலை செய்வதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாமற்போயிருக்கும். சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட செக்கோசுலுவோக்கியா தமிழ் அறிஞர் ஒருவர் 'தனித்தமிழ்' குறித்துச் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்தினைப்பொய்யாக்கியதே 'தென்மொழி'யின் வரலாறு. நற்பண்பு, இனவுணர்வு, மொழிப்பற்றுக் கொண்ட சிறுவர்கள், இளைஞர்கள் பல்வேறு துறைகளால் தாக்கப்பெற்றும், அவ்வுணர்வினை அழியாவண்ணம் பாதுகாத்து வருவது **தமிழ்ச்சிட்டும், தென்மொழியும்** ஆகும். நல்ல உள்ளங்களைக் கட்டிகாப்பதுதான் அரும்பணி! நல்ல உள்ளங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, இயக்கம் வளரும் இந்நாளில் 'நாற்றங்காலின்" மூடுவிழா வேண்டற்பாலதா? ஐயா, தென்மொழியன்பர்கள் எங்ஙனம் இதழ் வளர்ச்சிக்கு உதவ இயலும் எனத் தெரிவியுங்கள். தொண்டுள்ளங்கள் இணைந்து செயல்பட்டு உங்கள் சுமையினைக் குறைக்க முயலுகிறோம்.

— **த கரிகாலன்**, கடையநல்லூர்.

0 : 974: அன்புள்ள ஐயா! எக்கரணியம் கொண்டும் தென்மொழியைக் கைவிட வேண்டாம். தென்மொழி உயர் இதழ். அருங் கூர்ந்து விடாமல் நடத்த அன்புடன் வேண்டுகின்றேன். உங்கள் மீது உயிர் அன்புகொண்டவன் என்ற முறையில் என் வேண்டுதல் இதுவாகும். என்னுடைய வேட்கை எல்லாம் என்றும் தென்மொழி ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களுக்குத் தொண்டனாக இருக்க வேண்டும் என்பதே. என்றும் தென்மொழியார் தொண்டன்.

புலவர்— **இரா. சிவசண்முகம்**, வண்ணான்குண்டு.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்).